CC-O. In Public Domain. Digitized by eGangotri

திப்பு சுல்தான் ஒரு மத வெறியரா?

ஜலஜா சக்திதாசன்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

திப்பு சுல்தான், ஒரு மத வெறியரா?

எழுதியவர் :
ஜலஜா சக்திதாசன் M.A. M.Ed.,
சங்கீத சிரோமணி

வெளியீடு :
நித்தியானந்த ஜோதி நிலையம்
சென்னை-28

விலை : 6-50

Sri Vidyabharathi Book Centre, Sringeri

1988 வெளியீடு

CC-O. In Public Domain. Digitized by eGangotri

© ஆசிரியருக்கே

அச்சிட்டோர் :

மெர்குரி பிரிண்டர்ஸ்,
82, மைலாப்பூர் பஜார் ரோடு,
சென்னை-4.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களுக்கும்

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

ஸ்ரீ ஸ்ரீ சன்னிதானம் அவர்களுக்கும் சமர்ப்பணம்

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருளடக்கம்

பக்க எண்

I ஏன்? ஆசிரியர் விளக்கம்

1 உண்மை எது? 1

2 தந்தையும் மகனும் 4

3 சிர்ங்கேரி பீடாதிபதிகள் 14

4 சிர்ங்கேரி பீடாதிபதிகளுக்கு ஹைதர் அலியின் கடிதங்கள் 23

5 பாரதத்தின் தவப்புதல்வர் 29

6 மைசூர் புலி 37

7 திப்பு சுல்தானும் இந்து மதமும் 45

8 சாகசம், சூழ்ச்சி, சதி 87

9 திப்பு ஒரு தீர்க்கதரிசி 94

10 விளக்கம், விவரம், திருத்தம் 97

II பார்வை நூல்கள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஏன் ?

ஆசிரியர் விளக்கம்

இந்நூல் எழுத ஆரம்பித்தவுடன் பலர் என்னை ஒரே ஒரு கேள்வி கேட்டார்கள்.

"ஏன் திப்பு சுல்தானைப பற்றி எழுத வேண்டுமென்று நினைக்கிறீர்கள்?" என்பதே அது.

இந்த வினாவுக்கு விடை கூறுவது என் கடமை என தீர்மானித்தே, என் விளக்கத்தை இதோ கொடுக்கிறேன்.

* * *

1940-ம் ஆண்டு. பதினோரு வயது 'சிறுமியாக நான் ஸ்ரீரங்கப்பட்டினக் கோட்டையைச் சுற்றி பார்த்து வந்தேன். எவ்வளவு பெரிய கோட்டை! என வியந்தது என் இளம் மனம். சுவரில் தீட்டிய சம்பவங்களைப் பார்த்தேன். ரசித்தேன். அரங்கனின் கோயிலுக்குள் போனேன். இக்கோட்டையை ஆண்ட முஸ்லீம் அரசர்கள் இங்கு ஒரு கோயிலையும் விட்டு வைத்திருக்கிறார்களே! என ஆச்சரியப்பட்டேன்.

ஏன்? நான் இந்த மைசூர் சுல்தான்களைப் பற்றி ஓரளவு அறிந்திருந்தேன். இந்துக்களை இவர்கள் துன்புறுத்தியதாக வரலாறு வகுப்பில் படித்தோமே. அப்படி இருக்கும்போது இங்கு திருவரங்கனின் ஆலையம் கோட்டைக்குள் இருப்பானேன்? இக்கேள்விக்கு பதில் தேடினேன். கூறுவார் எவருமில்லை.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நான் படித்த காலம் ஆங்கிலேயரிடம் நாம் அடிமையாக இருந்த காலம். ஆசிரியர்கள் அனைவரும் வெள்ளையரே. இத்தகைய கேள்வியை அவர்களைக் கேட்டு விட்டால் உடனே என்ன கிடைக்கும் தெரியுமா? கடுந் தண்டனை. வீட்டிற்குத் தகவல் பறக்கும். ஏன், பள்ளியை விட்டே நீக்கி விடுவார்கள். அவ்வளவு பயம்.

இவ்வாறே தயக்கத்தில் நாட்கள் பறந்தன. ஆண்டுகள் உருண்டோடின. கல்லூரியில் எனக்கு வரலாற்று பாடம் துணைபாடமாக இருந்தது. இது சமயம், எனக்குத் தமிழ் பேராசிரியராக இருந்தவர் என் சிந்தனையைத் தூண்டினார், சிந்தித்தேன். பயன்? ஒன்றுமில்லை.

என் கேள்விக்கு பதில் கிடைக்கும் காலமும் வந்தது. என் கணவர் தேசீய எழுத்தாளர், அமரர் திரு. சக்திதாசன் சுப்ரமணியன், மைசூர் சுல்தான்களைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். நானும் அந்த ஆராய்ச்சியில் பங்கு கொண்டேன். சிர்ங்கேரி ஸ்ரீ சாரதா மடத்திற்கு சென்றபோது இன்னும் பல விவரங்கள் கிடைத்தன. உண்மையை எப்படி திரித்து, வரலாறு உருவாகியது என்று தெளிவாகத் தெரிந்தவுடன் உண்மையை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டுமென தீர்மானித்தோம். முக்கியமாக திப்பு சுல்தான் வெள்ளையர் சித்தரித்ததுப்போல் மதவெறியர் அல்லர் என்பதை ஆதாரத்துடன் காட்ட நினைத்தோம். ஆனால் இதற்கு எழுத்து வடிவம் கொடுக்கும் பெரும் பொறுப்பு எனக்கு மட்டுமே ஏற்பட்டது.

ஆதாரங்களைச் சேகரிக்கும் போது, பல நூல்களைப் படித்தேன். சென்னை, பாண்டிச்சேரி, கல்கத்தா நூல் நிலையங்களிலிருந்து ஆதாரங்கள் பல கிடைத்தன. தொல்பொருள் ஆராய்ச்சி நிலையங்களிலும், அவற்றின் நூல் நிலையங்களிலும் மற்றும் வெளியிடப்படாத பல விவரங்கள் கிடைத்தன. இங்கிலாந்தில் இருந்த சில

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நண்பர்கள் அங்கு இந்திய அலுவலக நூல் நிலையத்திலிருந்து பல விஷயங்களை சேகரித்து உதவினர். ஆனால் இவை எல்லாவற்றிலும் எனக்கு இந்நூல் எழுத பெரிதும் உதவியளித்தது. சிங்கேரியின் நூல் நிலையத்திலிருந்த பழைய தஸ்தாவேஜுகளே. திப்புவைப் பற்றி நான் எழுதவேண்டும் என்ற ஆசையைப் பற்றி சிர்ங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஸ்ரீ ஸ்ரீ மகா சந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த மகா சுவாமிகளிடம் கூறினேன். அதற்காக திப்பு எழுதிய கடிதங்களைப் பார்க்க வேண்டுமென கோரியபோது, மிகுந்த உற்சாகத்துடன் எனக்குத் தேவையான கடிதங்களைக் கொடுத்தார். மீண்டுமொரு சங்கடம். அவை கன்னடத்தில் இருந்தன. அதுவும் பழைய முறை எழுத்தில் அமைந்து இருந்தன. என் செய்வது என திகைத்தேன். எனக்கு உதவ வேத பாடசாலையின் முதல்வர் முன்வந்தார். அத்துடன் மகா சன்னிதானம் அவர்களின் பிரத்யேக காரியதரிசிகள் ஸ்ரீ கிரிதர சாஸ்திரிகள் M. A. அவர்களும், ஸ்ரீ சங்கர சர்மா B. E. அவர்களும் பெரிதும் ஒத்துழைத்து. அக்கடிதங்களை மொழிபெயர்க்க உதவினர். பழைய கன்னட முறையில் எழுதப்பட்ட அக்கடிதங்களை மொழி பெயர்க்கும்போது ஏற்பட்ட சிக்கல்கள் பல, பல, பற்பல! சொல்லுக்குச் சொல் மொழி பெயர்த்துக் கொண்டேன்.

சென்னைக்கு வந்தபின் அவற்றை வரலாற்றின் பின்னணியில் வைத்து பார்த்தேன். படிப்பவர்களுக்கு சுலபமாக புரியவேண்டும், அதே சமயம் பொருள் மாறாமல் இருக்க வேண்டுமென்ற முடிவுடன் அயராது உழைத்தேன். அதிக கவனத்துடன் பொருள் மாறாமல் அதே சமயம் தமிழ் மொழிக்கேற்ற முறையில் மொழி பெயர்த்தேன். மொழிபெயர்ப்பில் தவறேதும் இருப்பின், அறிஞர் உலகம் மன்னிக்க வேண்டுகிறேன்.

திப்புவைப் பற்றிய இன்னும் வெளிவராத பல உண்மைகளை அறிவதற்கு விரும்பினால் பங்களூரில் உள்ள தொல்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொருள் ஆராய்ச்சி நிலையத்தை அணுகவேண்டும். திப்பு எதிரில் வருவார். நம்முடனே உரையாடவும் செய்வார். இந்நூலுக்கு வேண்டிய படங்கள் அனைத்தையும் கொடுத்துதவிய பங்களூர் தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்திற்கு என் மனமார்ந்த நன்றி.

இத்துடன்ன்றி தொல்பொருள் ஆராய்ச்சியாளராகயிருந்து ஓய்வு திரு. K. R. ஸ்ரீனிவாசன் அவர்கள் இந்நூலுக்குச் செய்த பேருதவியை மறக்கவே இயலாது. அந்நூலுக்கு உதவிபுரிந்த அனைவருக்கும் என் நன்றி.

இந்நூல் உருப்பெற நல்லாசியும் வழங்கிய ஸ்ரீ ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கும், ஸ்ரீ ஸ்ரீ சந்நிதானம் அவர்களுக்கு என்னுடைய சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

ஜலஜா சக்திதாசன்

இடம்: சென்னை.
நவம்பர் 1988.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உண்மை எது?

ஆங்கிலேயர்கள் எழுதிய வரலாற்று நூல்களையே ஆதார மாகக் கொண்டு எழுதப்பட்டன நம் நாட்டு வரலாற்று நூல்கள். ஆதார நூல்களோ பெரும்பாலும், தங்கள் ஒரு பட்ச கருத்தையே புகுத்தி, நம்முடைய வரலாற்று வீரர்களை திரித்து தமக்கேற்றபடி மாற்றி எழுதின. அப்படி திரித்து கூறப்பட்ட வரலாற்று வீரர்களில் மைசூரை ஆண்ட ஹைதர் அலியும், திப்பு சுல்தானும் முக்கியமானவர்கள். ஆங்கிலேயர்கள் இவ்விரு முஸ்லீம் சுல்தான்களுக்கு கட்டிய பட்டம் என்ன தெரியுமா?

''கொடுங்கோல் மன்னர்கள்!''

''மதவெறி பிடித்தவர்கள்!''

''இந்துக்களை பலவாறு துன்புறுத்தியவர்கள்!''

இப்படி பல, பல பல!

ஆனால் ஆராய்ச்சி கூறும் உண்மை என்ன? இக்கூற்று உண்மைக்கு முற்றும் புறம்பானது என்பதே. ஹைதர் அலி அதிகாரத்தில் பற்றுக் கொண்டவர், என்றாலும் கொடுங் கோல் மன்னனாக விளங்கவேயில்லை. அவருக்குப் பின் அரசு செலுத்திய திப்புவோ மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட நல்லரசன்.

இதற்கும் ஓர் எடுத்துக்காட்டு உண்டு. மூன்றும் மைசூர் போரின் போது, மிகவும் நெருங்கிய திப்புவின் நண்பர்கள், ஊழியர்களில் சிலர் காரன்வாலிஸ் பிரபுவின் கைக்கூலிகளாக மாறினர். வெற்றி வாய்ப்புக்கள் மைசூருக்கு நிறைய இருந்த போதிலும், மக்கள் சேதத்தை பெரிது படுத்தி, திப்புவின் இளகிய மனத்தைக் கலைத்தனர். அருமை யாக நாடகமாடி வலிய சமாதான உடன்படிக்கைக்கு திப்புவை இணங்க வைத்தனர். இதன் பயன்? மங்களூர் உடன்படிக்கை மட்டுமல்ல. நஷ்ட ஈடாக ஆங்கிலேயருக்கு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கோடி ரூபாய் கொடுக்க வேண்டியதாயிற்று. அதுவும் மூன்றே மாதங்களில்! திப்புவின் அருமை புதல்வர் இருவர் பணயமாக ஆங்கிலேயருக்கு அனுப்பப்பட்டனர். மைந்தர் களின் வயது எட்டும், ஐந்துமே! அச்சமயம் மக்கள் என்ன செய்தனர்? ஏழை, எளியவர் என்ற பாகுபாடேயின்றி ஒவ்வொருவரும் தம்மிடம் இருந்த தங்கம், நாணயங்கள் ஆகியவற்றை தம் மன்னருக்கு தாமாகவே மனமுவந்து காணிக்கையாகக் கொண்டுவந்து கொடுத்தனர். ஏன்? திப்பு சுல்தானின் கொடுங்கோண்மைக்கு அஞ்சியா? இல்லை இல்லை! அவர் மீது கொண்ட அன்பால்; தம் நாட்டிற்காக தம்மிரு அறியா பாலகரையே பகைவரிடம் மன்னன் ஒப்படைத்ததற்காக! இதைக் காட்டிலும் அவர் மக்கள் விரும்பிய சிறந்த மன்னன் என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டும் உண்டோ?

'திப்பு சுல்தான் ஒரு மதவெறியன்!' என பொய் பிரசாரம் செய்தனர். இது உண்மையா? இல்லை, இல்லை; திப்பு சுல்தான் ஒரு மதவெறியனாக இருந்திருந்தால் ஸ்ரீரங்கப்பட்டினக் கோட்டையில் அரங்கனின் ஆலயம் இருந்திருக்குமா? இல்லை, முக்கால பூசையும், உத்சவங் களும் நடந்திருக்குமா? சிந்தியுங்கள், சிந்தியுங்கள், சிந்தியுங்கள்! அன்றியும் தேவனஹள்ளி போன்ற இடங்களில் காணப்படும் ஆணைகளில் கோயிலும் மசூதியும் இடம் பெற்றிருக்குமா?

இந்துக்களை துன்புறுத்தினார் திப்பு என்பது அடுத்த குற்றச்சாட்டு. இதுவும் ஆதாரமற்றதே. எப்படி? திப்புவின் அரசு பணியில் முக்கிய மந்திரியாக இருந்தவர் பூர்ணய்யா. மொத்தமாக அரசாங்க பணியில் இருந்தவர்களின் எண்ணிக்கையில் 45,000 முதல் 50,000 பேர்கள் இந்துக்கள். இந்துக்களை துன்புறுத்தியதாக கூறும் கூற்று உண்மை யாகுமா?

இவ்வாறிருந்தும் கடைசியில் திப்பு சுல்தான் படுதோல்வி அடைந்ததாக வரலாறு கூறுவது சரியா? இதைப் பற்றிய

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உண்மை அறிய வேண்டுமானால், திப்புவுக்கு தோல்வியைத் தேடி தந்த ஆங்கிலேயரின் பிரித்தாளும் தந்திரத்தை ஆழ்ந்து ஆராயவேண்டும். உண்ட வீட்டுக்கே இரண்டகம் நினைத்த நம்மவரின் துரோகச் செயல்களை நினைத்து நினைத்து வருந்தவேண்டும். திப்புவின் இறுதி வார்த்தைகள் 'பகை வெளியில் இல்லை! நம்மிடையே நமக்குள்ளேயே இருக்கிறது' என்பதை நினைவு கூற வேண்டும்.

திப்புவை அழித்தார் வெலிங்கடன் பிரபு. ஆனால் அவரே கூறியது போல், திப்பு, வெறும் திப்பு சுல்தானல்ல! இந்தியன். ஒரே ஒரு இந்தியன்! திப்புவின் பெயரை அவரால் அழிக்கவே முடியவில்லை. வீரனாகவே வளர்ந்து, சுத்த வீரனாகவே வாழ்ந்து, நம் நாட்டின் சுதந்திரத்திற்காக தன் உயிரையே அர்பணித்த இந்த பெரிய வீரத் தியாகியை மறப்பது அறமாகுமா?



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இரண்டாம் அத்தியாயம்

தந்தையும் மகனும்



ஹைதர் அலி — (கி.பி. 1722 — 1782)

எட்மண்ட் பர்க் என்பவர் ஒரு தலைசிறந்த ஆங்கிலேய அரசியல் தத்துவ ஞானி. அவர் ஹைதர் அலியைப் பற்றி 1783-ல் என்ன சொன்னார் தெரியுமா? ''இந்தியாவில் வாழ்ந்த அரசர்களுள் தலைசிறந்த அரசன் ஹைதர் அலி. அத்துடனன்றி இந்தியாவில் மிக தலைசிறந்த வீரரும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆவார். மென்மையானவர்; சமநோக்குடையவர் இவர். அவர் வாழ்ந்த காலத்தின் முதல் அரசியல்வாதி அவரே ஆவார்.'' *

மாற்றானும் போற்றிய இந்த ஹைதர் அலி யார்? ஆங்கிலேயரின் ஆதாரமற்ற கூற்றில் 'மதவெறி, இரத்த வெறி, மண்ணாசை மூன்றும் இருந்த ஒரு முஸ்லீம் போர் வீரன். ஏன் இத்தகைய அவதூறை ஆங்கிலேயர் பரப்ப வேண்டும்? இதற்குக் காரணம் உண்டு. ஆங்கிலேயரின் நாடு பிடிக்கும் பேராசைக்கு பெருந்தடையாக விளங்கிய ஹைதர் அலி, பாக்தே மகமத்தின் மகன். அவர் ஒரு படிக்காத மேதை. சாதாரண போர் வீரனாக தன் வாழ்க்கையை தொடங்கியவர். தம் இருபத்து நான்காம் ஆண்டு முதல் போரில் ஈடுபட்டவர். ஆனால் சமயோசித புத்தியும், கூரிய அறிவின் காரணமாக வும் சுல்தானாக உயர்ந்தவர். அப்போது மைசூரின் மன்னர், சர்வாதிகாரிகள் நஞ்சராஜ், தேவராஜ் என்ற இருவரிடம் கைப்பாவையாக இருந்த சமயம். 1749ல் தேவனஹள்ளி கோட்டையைப் பிடித்ததால் முதன் முதல் தனியொரு படைக்குத் தலைவன் ஆனார் ஹைதர்; சில மாதங்களுள் நைஜாமுக்கும் மைசூர் நாட்டிற்கும் போர் ஏற்பட்டபோது போரில் முழு வெற்றியோ தோல்வியோ ஏற்படா விட்டாலும் நாஸர்ஜங்கின் செல்வத்தை சூறையாடினார்; மூன்று ஒட்டகைகளின் மேல் தங்க பொதிகளை ஏற்றி வைத்த ஹைதர் என்ன செய்தார்? ஒரு ஒட்டகையும் அதன் மேலிருந்த தங்கத்தையும் நஞ்சராஜுக்கு அனுப்பினார். மீதி இரண்டும் அவருடைய தேவனஹள்ளி இருக்கைக்குச் சென்றன. இச்செல்வத்தை தன் படையை பெருக்குவதற்கும், பிரெஞ்சுக்காரரைக் கொண்டு தன் படைக்கு பயிற்சி அளிக்கவும் உபயோகித்தார். இந்நிகழ்ச்சிக்குப் பின் மீண்டும் பதவி உயர்வு பெற்றார் ஹைதர். திருச்சி முற்றுகையின் போது, நஞ்சராஜ் முக்கிய படைத் தலைவர் ஆக்கினார்.

---

* **Edmund Burke Page 206. The Sword of Tipu Sultan.**

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இதற்கிடையில் நஞ்சராஜ், தேவராஜ் இரு சகோதர ரிடையே பூசல் ஆரம்பித்தது. திருச்சி படையெடுப்பில் ஏராளமாக செலவழிந்து விட்டது. நஞ்சராஜ் நைஜாமுடன் சமாதானம் செய்துக் கொள்ள முன்வந்தபோது, நைஜாம் கேட்ட தொகை மிக மிக அதிகமாக இருந்தது. எனவே, ஆபத்தை தவிர்க்க ஆண்டவனை கொள்ளையடிப்பதிலும் தயங்கவில்லை நஞ்சராஜ். ஆபத்துக்குப் பாதகமில்லை என தன்னை தேற்றிக் கொண்டு கோயில்களை தாமே கொள்ளை யடித்து நைஜாமை திருப்திபடுத்தினார்.

படைகளுக்கோ சம்பளம் சரிவர கொடுக்காததால், சிலர் படைகளை நஞ்சராஜுக்கு எதிராக ஏவி கலகம் செய்தனர். சிப்பாய்கள் சீறிட்டு எழுந்தனர். இந்த சங்கடமான சூழ் நிலையில் நஞ்சராஜுக்கு உறுதுணையாக நின்றார் ஹைதர்.

சிறந்த இராஜதந்திரி :

இச்சமயம் ஹைதர் துணிச்சலாக ஸ்ரீ ரங்கபட்டினத்திற்கு தன் படையுடன் விரைந்தார். கலகக்காரர்களை சிறை பிடித்தார். அவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்தார். பிரிந்த சகோதரர்களை சேர்த்து வைத்த போது இருவரும் ஆனந்த கண்ணீர் பெருக்கினர்! படை வீரர்களுக்கு தேவராஜின் செல்வத்தையும் தான் அபகரித்த செல்வத் தையும் சேர்ந்து, பாக்கி சம்பளத்தையும் அதற்குமேல் கொஞ்சம் தொகையும் கொடுத்து, நாட்டின் பொருளாதாரத் தையும் சீர்படுத்தி அமைதியை நிலைநாட்டினார்.

இதற்கிடையே மராத்தியர் மைசூரை தாக்கினர். ஹைதர் அவர்களை பல்வேறு இடங்களில் தாக்கி, மைசூருக்கு சாதகமான முறையில் உடன்படிக்கையும் செய்து வைத்த சிறந்த இராஜதந்திரி ஆனார். சாதாரண நாயக் ஆக இப்போது ஹைதர் இல்லை, தலைசிறந்த பிரதான தளபதி ஹைதராக மாறி இருந்தார். 'பாத்தா ஹைதர் பஹதூர்' என்ற பட்டமும் பெற்றார்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நாட்கள் செல்ல, செல்ல, நஞ்சராஜுக்கு மக்கள் ஆதரவு குறைந்து, கடைசியில் இல்லாமலே போயிற்று. நேரடி எதிர்ப்பும் வெளிப்படை பகையும் தோன்றியது. இதே சமயம் ஹைதரோ, படை வீரர்களின் எண்ணிக்கையை அதிகரித்த வண்ணம் இருந்தார். மீண்டும் மைசூரில் பொருளாதாரம் சீர் குலைந்தது. இந்நிலையில் மைசூர் படைவீரர்களோ, ஹைதரை மிகவும் மதித்தனர்; விரும்பினர்; ஏன், வழி பட்டனர் என கூடச் சொல்லலாம். ஏன் தெரியுமா? ஹைதர் அவர்களுடன் கூட சேர்ந்து, சேனாதிபதி என வித்தியாசம் பாராமல், அவர்களுடனே அவர்களுக்கு இடப்பட்ட எளிய குறைந்த உணவை உட்கொண்டார். தாமும் சம்பளம் வாங்க மறுத்து, அவர்களுடைய துன்பத்தில் வலிய பங்கு கொண்டார். சுற்றிலும் இருந்த அதிருப்தியை தாங்க மாட்டாது நஞ்சராஜ் ஹைதரிடம் நாட்டை ஒப்படைத்து தலைமறைவானார். இச்சமயம், சூழ்ச்சிகள் உருவாயின.

ஹைதர் நாட்டை விட்டு ஓட நேர்ந்தது. ஆனால் நஞ்சராஜ் தம்மிடம் வந்த ஹைதருக்கு உதவினார். அவர் பொருள் கொண்டு, படையைத் திரட்டி, தம் பகைவரை வென்று, அதிகாரத்தை கைப்பற்றி, தன் செல்வாக்கையும் நிலைநாட்டினார் ஹைதர்.

பின்பு ஹைதர், திண்டுக்கல்லில் படை பலம் பெருக்கிய துடன், தொழில் முன்னேற்றத்தையும், அப்பகுதியில் ஏற்படுத்தியதால் சிறந்த நிர்வாகத் திறமை படைத்தவர் என்ற பேரும் புகழும் பெற்றார். 1761 ஆம் ஆண்டு எவ்வித புரட்சியோ, கலவரமோ இன்றி ஹைதர் அலி, மைசூர் நாட்டு சுல்தான் ஆனார்.

திப்பு சுல்தான் :

இச்சூராதி சூரனின் மகனே திப்பு சுல்தான். சாதாரண நாயக்காக இருந்த ஹைதரின் மகனுக்கு சுல்தான் என்ற பட்டம் ஏன் வந்தது? துறவி திப்பு சுல்தான் மஸ்தான்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri
ஒய்லியா என்றொரு பக்கிரி. அவரை மஸ்ட் கலந்தர் என்றும் சச்சல் பக்கிரி என்றும் அழைத்தனர். அவர் ஒரு நாள் கூட தொழுகையில் பங்கு கொண்டதில்லை. ஆனால் அவருக்கு தெய்வத்தின் திருவருளால் சிறப்பான சக்திகள் ஏற்பட்டு இருந்தன. அவருடைய சமாதிக்குச் சென்று ஹைதரும் அவர் தம் மனைவி பக்ருன்னிஸாவும் தொழுதனர். தங்களுக்கு



திப்பு — (கி. பி. 1753 — 1799)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மகன் பிறக்க வேண்டுமென வேண்டினர். மகனும் பிறந்தான். அந்த பக்கிரி திப்பு சுல்தானின் பெயரை அக்குழந்தைக்கு வைத்தனர். எனவே நாயக் ஹைதரின் மகன் 'பிறக்கும் போதே சுல்தான்' ஆனார்.

இந்தக் குழந்தையை இறைவன் பணியில் ஈடுபடுத்துவதாக ஹைதர் தம்பதிகள் வாக்கும் அளித்தனர். ஆனால் அடுத்து பிறந்த கரீம் என்ற மகனோ, அரசாள்வதற்கு ஏற்ற மனநிலை கொண்டவனாக இல்லாததால், வாக்கை நிறைவேற்றவில்லை. இதுவும் நன்மைக்கே! இல்லாவிட்டால் ஹைதர் 1782 வரை வாழ்ந்திருக்க முடியுமா?

மன்னருக்குத் தேவையான எல்லா வித்தைகளையும் கற்றிருந்த திப்பு, தன் தந்தையை எத்தனையோ முறை காத்தார்.

முதன்முறையாக திப்பு போர்க்களத்தை சந்திக்க, தம் பதினைந்தாம் வயதில் ஹைதரால் அழைத்து செல்லப்பட்டார். முதன் முறையாக, அத்து மீறி நடந்த ஒரு மனிதனை சுட்டுக் கொன்றதும் அப்போதே. போர்க்களத்தை பார்வையிடவே ஹைதர் அவரை அழைத்துச் சென்றார். ஆனால்......

முதன் முறை!

ஹைதரின் நாட்டிலே பாலம் என்றொரு மலைநகர், ஸ்ரீ ரங்க பட்டினத்தைத் தாக்கினான் அம்மன்னன். ஸ்ரீ ரங்க பட்டினம் ஹைதருடைய ஆதிக்கத்துக்குட்பட்டது. எனவே சீற்றங்கொண்ட ஹைதர் அப்பகுதியின் மீது படையெடுத்தார். மகனை 'முன்னே வராதே' குண்டுகள் வெடிக்கும்; பின்னாலே இரு! போரை மட்டும் கவனி. பின் என்னிடம் போரைப் பற்றி விவரிக்க வேண்டும்!'' என எச்சரித்து சென்றார் ஹைதர். மகனை காஜி கான் என்ற படைத் தலைவனின் பொறுப்பில் விட்டு சென்றார். ஒவ்வொரு மணி நேரமும் திப்புக்கு தம்மைப் பற்றிய

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

செய்தியை அனுப்புவதாக வாக்களித்து விட்டுச் சென்றார். போரின் மும்முரத்தில் செய்தி அனுப்ப மறந்து விட்டார். ஹைதர் காடுகளுக்கிடையே மறைந்து விட்டார். அடுத்து காஜி கான் தன் படையுடன் ஹைதருக்கு பக்க பலமாக சென்று விட்டார். 500 படை வீரர்களுடன் இருந்த திப்பு, மூன்று மணி நேரமாகியும் எவ்வித தகவலும் இல்லாததால், பதைத்தார். துணிச்சலுடன் தன் சிறு படையை, காட்டின் வழியே நடத்தி சென்றார்.

அப்போது, பாலம் மன்னனின் குடும்பம் பதுங்கி இருந்த இடத்திற்கு நேர் எதிராக தான் நிற்பதைக் கண்டார். பாலம் நாட்டு ராணியும் அவள் மக்களும், இதர பெண் மணிகளும் திப்புவிடம் வந்தனர். பாதுகாப்பு கோரினர், திப்பு அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதாக வாக்கு கொடுத்தார். இதே நேரம், அதுவரை வீரமாக பொருத பாலம் நாட்டு மன்னருக்கு தம் குடும்பம் திப்புவினால் சூழப்பட்ட செய்தி பறந்தது. அவ்வளவே !

அவர் சமாதானம் வேண்டி வெள்ளைக் கொடியைக் காட்டினார். சமாதானத்திற்கு பதிலாக தம் குடும்பத்தினரின் விடுதலையை வேண்டினார். மக்பூல் கான், ஹைதர் அலியின் படைத் தலைவர்களில் ஒருவன். நேரே பாலம் மன்னனின் குடும்பமிருந்த இடத்துள் புகுந்தான். பாலம் ராணியை தரதரவென இழுத்து வந்தான். மற்ற வீரர்களோ, இதே ஈன செயலில் ஈடுபடத் தயாராக இருந்தனர். திப்பு மக்பூலை எச்சரித்தார். ராணியை விட்டு விடச் சொன்னார். மக்பூல் ஏளனமாகச் சிரித்தான். மற்றவர் களை படை வீரர்கள் இழுத்து வரலாயினர். மீண்டும் திப்பு ஆணையிட்டும் பலன் ஏதும் இல்லாமல் போகவே, அவனை தலையில் சுட்டார். மக்பூல் கீழே விழுந்து இறந்தான்.

ஹைதர் மகனை இவ்வெற்றிக்குப் பதிலாக என்ன வேண்டும் என கேட்டபோது, மகனின் கோரிக்கை தந்தைக்கு அதிர்ச்சியைத் தந்தது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

'சிறைப் படுத்தப்பட்ட இராணியையும், மற்ற பெண் களையும் கௌரவமாக விடுதலை செய்ய வேண்டும்!' என்பதே அந்த கோரிக்கை.

வாணியம்பாடி :

1767 ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் நாடு பிடிக்கும் வெறி, ஆங்கில மைசூர் யுத்தமாக உருவெடுத்தது. அப்போது திப்புவுக்கு வயது பதினேழே. ஆங்கிலேயர் தந்திரமாக நைஜாமுக்கும் மராத்தியருக்கும் வலை வீசினர். மராத்தியர் வலையில் விழவில்லை. நைஜாமையும் ஹைதரின் இராசதந்திரம் விலக்கியது.

இப்போது தந்தையும் மகனும் ஒரே மூச்சாக ஆங்கிலேயரை விரட்டுவதில் ஈடுபட்டனர். ஹைதர் நேரடியாக ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடுவார். திப்புவோ, திடீர் திடீரென தாக்குதல் நடத்தி ஆங்கில படையின் கவனத்தை திருப்ப வேண்டும் என்பது அவர்கள் தீட்டிய போர் திட்டம்.

அதன்படி திப்பு சென்னையை நோக்கி படையெடுத்தார். வழியிலே கிழக்கிந்திய கம்பெனியின் அட்டூழியங்களுக்கு இலக்கான மக்கள் அவருடன் ஒன்று சேர்ந்தனர். சென்னைக் கோட்டை கவர்னர், திப்புவின் தாக்குதலை சமாளிக்க முடியாது தப்பித்து ஓடினார்.

சுலபமாக சென்னை வீழ்ச்சியுறும் தருணத்தில், ஹைதர் திருவண்ணாமலையில் தோல்வி அடைந்ததால் உடனே தனக்கு உதவியாக திப்பு வரவேண்டும் என்ற செய்தி வந்தது.

திப்பு உடன்டியாக தன் தந்தைக்கு உதவ பறந்தார். வழியில் எதிர்த்த ஆங்கில படையை தவிடு பொடியாக்கி வாணியம்பாடிக்கு பத்து மைல் தொலைவில் தந்தையை சந்தித்தார்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

புத்துணர்ச்சி பெற்றார் சோர்வடைந்த ஹைதர். மகனை அணைத்தபடி அவர் கூறிய சொற்களின் ஆழத்தை கூற வார்த்தைகளால் இயலுமா? "நீ பத்திரமாக இருப்பதில் தானிருக்கிறது என் சந்தோஷம்! உன் வெற்றிகளிலுள்ளது என் மன ஆறுதல்" என்றார் ஹைதர் உருக்கமாக.

வாணியம்பாடி வீரர் திப்புவின் போர்முறைப் பற்றி கித்வானி என்ன கூறுகிறார்:

"ஆங்கிலேயர் மீது, மான் கூட்டத்தின் மேல் பாயும் சிங்கமாகப் பாய்ந்து திப்பு, அவர்கள் வாழ முடியும் என்ற நம்பிக்கையையே நிரந்தரமாக சிதறடித்து, அழித்தார். *

சமாதான உடன்படிக்கை 1769, மார்ச் மாதத்தில் கையெழுத்தாயிற்று.

ஹைதர் எங்கே?

மராத்தியருடன் போர் செய்த போது ஒரு சம்பவம் நடந்தது. ஹைதரைப் போலவே தாடி வளர்த்துக் கொண்டு தோற்றம் அளித்த ஒருவரே உண்டு மைசூரில். அவர் ஒருவருக்கே அசாத்திய துணிச்சல் இருந்தது மன்னனைப் போல் தாடி வளர்க்க. ஒரு நாள் போரில், அதிகம் குடித்து விட்டு ஹைதர் சென்றார். எதிரிகள் அவரைச் சூழ்ந்துக் கொண்டு விட்டனர். அந்த சமயம், அருகிலிருந்த அந்த படைத்தலைவன் ஹைதரை ஒரு குதிரை மீது ஏற்றி, தப்ப வைத்தான்.

ஹைதர் மராத்தியரிடம் சரண் அடைந்து விட்டதாகச் செய்தி பரவியது. திப்பு தன் தந்தையை விடுதலை செய் வதற்காக தம் நாட்டையே மராத்தியருக்கு கொடுக்க துணிந்து, சமாதான ஒப்பந்தத்தையும் தயார் செய்து விட்டார். அதற்கு முன் தன் தந்தையை ஒரே ஒரு முறை

---

* **Page 143. Sword of Tipu by Bhagavan S. Kidwani**

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சந்திக்க வேண்டுமென மராத்தியருக்கு தெரிவித்து அவர்கள் முகாமிற்குச் சென்றால்...அங்கே ஹைதரை கண்டாரா, இல்லை, இல்லை! அவரைப் போல் 'குறுந்தாடியுடன் தோற்றம் அளித்த படைத் தலைவனைக் கண்டார். உடனே விவரத்தை ஊகித்துக் கொண்டு விட்டார் திப்பு, எனினும் உடன்படிக்கை பத்திரத்தைக் கொடுக்காமல், படைத் தலைவன் தான் தன் தந்தை ஹைதர் அலி சுல்தான் என மராத்தியர் நம்பும்படி மண்டியிட்டு மரியாதை செலுத்தினார்.

ஹைதரை ஒரு முறை கூட பார்க்காத மராத்தியர் படைத் தலைவனை ஹைதர் என்றே நம்பினர். அதே சமயம் திப்பு தன் தந்தையை தேடி கண்டுபிடிக்க அரும்பாடு பட்டார். ஹைதர் எங்கே, எங்கே, எங்கே?

குதிரை மீது சென்ற ஹைதரோ குதிரையைக் கூட கட்டுப்படுத்த முடியாத நிலையிலிருந்தார். ஹைதரை ஒரு பள்ளத்தில் தள்ளிவிட்டு குதிரை பறந்து விட்டது. குடியானவன் ஒருவன் அவ்வழியே சென்றான். ஹைதரை தூக்கிச் சென்று தன் வீட்டில் வைத்து பாதுகாத்து வந்தான். அவனும் ஹைதரைப் பார்த்ததே கிடையாது.

நினைவு திரும்பிய ஹைதர் உடனே மகனைத் தேடி சென்றார். நடந்த விவரங்களை அறிந்த போது.

''மன்னனுக்காக மண்ணை (நாட்டை) பணயம் வைப்பது தவறு!'' என்றார் மகனிடம் திட்டவட்டமாக.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மூன்றாம் அத்தியாயம்

ஆதி சங்கரர்

ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீ சங்கரர் அவதரித்தார். அவதரித்த புண்ணிய பூமி காலடி. ஐந்தாம் வயதில் உபநயனம் நடந்தது. விரைவில் வேத சாஸ்திரங்களைக் கற்றார். துறவி ஆகத் தம் தாயாரை அனுமதி வேண்டினார். முதலில் அனுமதி வழங்க மறுத்த தாயார் பின்னர் இணங்கினார். வீடு துறந்தார் சங்கரர். வடக்கு நோக்கிப் புறப்பட்டார். தவமுனி கௌட பாதரின் சீடர் கோவிந்த பகவத் பாதர். அவரிடம் உபதேசம் பெற்றார் சங்கரர். தம் குருவின் ஆணைப்படியே அத்வைத பிரசாரம் செய்ய வேண்டிய காசி நகரடைந்தார்.

அங்கே மாறுபட்ட கருத்து கொண்ட பூர்வ மீமாம்சகரை வென்றார். பூர்வ மீமாம்சகர், வேதத்திலே விதிக்கப்பட்டபடி ஒவ்வொருவரும் தத்தம் கருமங்களைச் செய்தால் போதும் என்ற கருத்துடையவர்கள். அவர்களிலே முக்கியமானவர் விச்வரூபாச்சாரியார் மாகிஷ்மதி நகரில் இவர் வசித்தார். சங்கரர் உத்தர மீமாம்சகர். அதாவது கருமம் செய்தால் மட்டும் இறைவனை அடைந்துவிட முடியாது என்ற கொள்கை உடையவர்கள் உத்தர மீமாம்சகர்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சங்கரர் காசியிலே தம் வெற்றியை நிலைநாட்டியவுடன் மாகிஷ்மதி நகரம் சென்று விச்வரூபரை வாதுக்கு அழைத்தார். வாதிலே விச்வரூபரின் மனைவியே நடுவர். அவர் போட்டியிடுவோர் இருவரையும் இரு மலர்மாலைகளை அணியச் செய்தார். முதலில் எவருடைய மாலை வாடுகிறதோ, அவரே தோற்றவர் என்றார். மற்றொரு நிபந்தனையும் விதித்தார். விச்வரூபர் தோற்றால் துறவறம் ஏற்கவேண்டும்; சங்கரர் தோற்றாலோ இல்லறம் ஏற்க வேண்டுமென்றார். விச்வரூபர், சங்கரர் ஆகிய இருவரும் இந்த நிபந்தனையை ஏற்றார்கள். இவ்விவாதம் பதினேழு நாட்கள் தொடர்ந்து நடந்தது.

கலைமகள் ரூபமான உபயபாரதி விச்வரூபரின் மாலை வாடுவதைக் கண்டார். "பிக்ஷைக்கு வாருங்கள்!" என்று அவரை அழைத்தார். சந்நியாசிகளுக்கு அளிக்கப்படும் உணவு பிக்ஷை எனப்படும். தம் கணவர் தோற்றுவிட்டார் என்ற தீர்ப்பை சூசகமாகக் கூறிவிட்டார் அன்னை.

சங்கரர் அம்மையாரையும் போட்டியிலே வென்று, தம்முடன் அன்னை வரவேண்டும் என வேண்டினார். உபயபாரதியும் இணங்கினார். விச்வரூபர் சங்கரரின் சீடரானார். அவரே



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சுரேசுவராச்சாரியார். சங்கரர் தம் நாலு சீடர்கள் தொடர சிருங்ககேரியை அடைந்தார். சிருங்ககிரியிலே என்ன கண்டார்? இயற்கை யன்னையின் வனப்பைக் கண்டார். பசுவும் புலியும் சேர்ந்து நீர் குடிக்கக் கண்டார். நல்லபாம்பொன்று படம் விரித்து, தவளை ஒன்றை வெயிலின் கொடுமையினின்று பாதுகாப்பதைக் கண்டார். பகையில்லாத இந்த இடமே மோன தவத்திற்கு ஏற்றது என்பதை உணர்ந்தார்.

அம்மையின் சிலம்பொலி திடீரென நின்றது. தம்மையறியாது திரும்பினார். அன்னை தான் இட்ட நிபந்தனையின்படி அங்கேயே நின்று விட்டார். அவளிட்ட நிபந்தனைதான் என்ன?

'சங்கரர் திரும்பிப் பாராமல் செல்ல வேண்டும். திரும்பிப் பார்த்து விட்டாலோ, அந்த இடத்திலேயே நின்று விடுவேன், பின்தொடர்ந்து வரமாட்டேன்'' என்பதே தேவியின் நிபந்தனை.

அங்கேயே பாறை யொனறில் ஸ்ரீ சக்ரம் வடித்து ஸ்ரீ சாரதாதேவி என்ற பெயரில் அன்னையை பிரதிஷ்டை செய்தார் சங்கரர். இதுவே சிருங்கேரி ஸ்ரீ சாரதாபீடம்.

''இந்த பீடத்தில் அமர்பவர் எவரே ஆயினும் அவர் நானே ஆவர்'' என்று அருள் பாலித்தாள் அன்னை சாரதா தேவி.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இப்பீடத்தின் முதல் ஆச்சாரியராக அமர்ந்து அத்வைத பிரசாரம் செய்யும்படி ஸ்ரீ சுரேசுவரருக்குக் கூறினார் சங்கரர்.

சுரேசுவராச்சாரியாரும் சங்கரரின் கட்டளையை ஏற்று சாரதா பீடத்தின் முதல் ஆச்சாரியராக அமர்ந்தார்.

துங்கை ஆற்றின் பாறைமீது ஸ்ரீ சக்ரவாசினியாக அமைந்த பிரம்ம வித்யா சொரூபிணி, ஸ்ரீ சாரதாம்பாள் கைலைநாதர் அருளிய ஸ்படிக லிங்கமாக விளங்குகிற ஸ்ரீ சந்திர மௌலீசுவரையும், ரத்தின கணபதியையும் ஸ்ரீ சுரேசுவராச்சாரியிடம் கொடுத்து பூஜை செய்துவருமாறு கட்டளையிட்டார் *

ஸ்படிகம் வெண்மையானது, தூய்மையானது; மாசில்லாதது. எவ்வித வடிவுமில்லாதவன் இறைவன், எவ்வித நிறமும் அவனுக்குக் கிடையாது. எனினும் விரும்பியவர் விரும்பியவாறு காட்சி அளிப்பவன் என்பதை ஸ்படிக லிங்கம் குறிக்கிறது.

ஸ்படிக லிங்கத்தின் உச்சியில் வீசும் நிலவொளியோ, அறிவை குறிக்கும். ஆனந்தத்தைக் குறிக்கும். சுருக்கமாக இது மெய்யறிவுடன் கூடிய நித்யானந்தத்தையே குறிக்கும்.

---

* வேதங்கள் நான்கு. பீடமும் நான்கே. சீடர்களும் நால்வர். சங்கரர் நான்கு திசைகளில் நான்கு பீடங்களை ஏற்படுத்தினார். அதன்படி :

யஜுர் வேதத்தின் பீடம் தெற்கே சிர்ங்கேரி
சிர்ங்கேரி தக்ஷிணாம்ய பீடம்
அதர்வண வேதம் பீடம் வடக்கே பத்ரிநாத்
ரிக் வேத பீடம் கிழக்கே பூரி
சாம வேத பீடம் மேற்கே துவாரகை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இந்த பீடத்தில் சுரேசுவருக்குப் பின் சங்கிலித் தொடர் போல் இடைவிடாது பீடாதிபதிகள் அமர்ந்து ஞானஒளி வீசி வந்தனர். அவர்கள் பெயர்களை மட்டும் இங்கே குறிப்பிடுகிறோம். +

1) சங்கர பகவத் பாதர்
2) சுரேசுவரர்
3) ஸ்ரீ நித்யாபோதக ஞானாச்சார்யா
4) ஸ்ரீ ஞான கணாச்சாரியா
5) ஸ்ரீ ஞானோத்தமா சிவாச்சாரியா
6) ஸ்ரீ ஞான கிரி
7) ஸ்ரீ சிம்மகிரி
8) ஸ்ரீ ஈஸ்வர கிரி
9) ஸ்ரீ ந்ருசிம்ம தீர்த்தர்
10) ஸ்ரீ வித்யாசங்கர தீர்த்தர்
11) ஸ்ரீ பாரதி கிருஷ்ண தீர்த்தர்
12) ஸ்ரீ வித்யாரண்யர்
13) (முதலாம்) ஸ்ரீ சந்திர சேகர பாரதி சுவாமிகள்
14) (முதலாம்) ஸ்ரீ நரசிம்ம பாரதி சுவாமிகள்
15) (இரண்டாம்) ஸ்ரீ சந்திர சேகர பாரதி சுவாமிகள்
16) (முதலாம்) ஸ்ரீ புருஷோத்தம பாரதி சுவாமிகள்
17) ஸ்ரீ சங்காரானந்த சுவாமிகள்.
18) (மூன்றாம்) ஸ்ரீ சந்திர சேகர பாரதி சுவாமிகள்
19) (இரண்டாம்) ஸ்ரீ ந்ருசிம்ஹ பாரதி சுவாமிகள்

\+ சிர்ங்கேரி ஸ்ரீ சாரதா பீட வரலாறு
ஆசிரியர்கள் : அமரர் திரு சக்திதாசன் சுப்பிரமணியன்
திருமதி ஜலஜா சக்திதாசன்
The Throne of Transcedental Wisdom by
Sri K. R. Venkataraman – P. 14 and

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

20) இரண்டாம் ஸ்ரீ புருஷோத்தம பாரதி சுவாமிகள்

21) ஸ்ரீ ராமசந்திர பாரதி சுவாமிகள்

22) (மூன்றாம்) ஸ்ரீ நரசிம்ம பாரதி சுவாமிகள்

23) (நான்காம்) ஸ்ரீ நரசிம்ம பாரதி சுவாமிகள்

24) (முதலாம்) ஸ்ரீ அபிநவ நரசிம்ம சுவாமிகள்

25) (முதலாம்) ஸ்ரீ சச்சிதானந்த பாரதி சுவாமிகள்

26) (ஐந்தாம்) ஸ்ரீ ந்ருசிம்ம பாரதி சுவாமிகள்

27) (இரண்டாம்) ஸ்ரீ சச்சிதானந்த பாரதி சுவாமிகள்

28) ஸ்ரீ அபிநவ சச்சிதானந்த சுவாமிகள் 1741—1767

28 வது பீடாதிபதி காலத்தில் ஹைதர் அலி செல்வாக்கு பெற்று 1763 ஆண்டு கேலடி இராஜ்யத்தை கைப்பற்றி பின்னர் மைசூர் ஆட்சி பீடத்தையும் கைப்பற்றினார்.

ஜகத்குரு ஸ்ரீ அபிநவ சச்சிதானந்த சுவாமிகள் பெட்னூருக்கு அதன் இராணி வீரமாஜியின் அழைப்பின் பேரில் சென்றார். அந்த அரசி அவரை தம் தலைநகருக்கும் அழைத்துச் சென்று, மரியாதை செய்தார்.

மைசூரில் அச்சமயம் பெரியதொரு வறட்சி ஏற்பட்டது. அவ்வமயம் மைசூர் மன்னராக இருந்தவர் இரண்டாம் கிருஷ்ண ராஜ உடையார் ஆவார். சிருங்க கிரியின் ஜகத்குருவை தம் தலைநகர் ஸ்ரீரங்கப்பட்டினத்திற்கு அழைத்தார். ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சாரியா ஸ்ரீ ஸ்ரீ அபிநவ சச்சிதானத்த சுவாமிகள் இராமேசுவரம் செல்வதற்கான ஏற்பாடுகளுக்கு பெரிதும் உதவி செய்து, மடத்தின் நிலுவைகளை வசூலிக்க பெரிதும் உதவி செய்தார்.†

1740-61 ஆம் ஆண்டு வரை மராத்திய பீஷ்வா ஆகவிருந்த பாலாஜி பாஜிராவ் பிரதான், தன் உறவினர் இரகுநாத ராவ் என்பவரை சுவாமிகளிடம் அனுப்பினார்.

† Mysore Archaeological Reports, 1916 P. 72 1920-PP

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஏன்? சிர்ங்கேரி ஜகத்குருவை தம் நாட்டிற்கு அழைக்க வேண்டும் என்பதற்காக. அந்த அழைப்பிற்கிணங்க ஸ்ரீ ஸ்ரீ (முதல்) அபிநவ சச்சிதானந்த பாரதி சுவாமிகள் 1760-61 பூனாவுக்குச் சென்றார். இந்த யாத்திரையை ஹைதர் மிகவும் வரவேற்று, சுவாமிகளுக்கு ஒரு யானை, ஐந்து குதிரைகள், ஒரு பல்லக்கு ஒட்டகை - மற்றும் தங்கம் பட்டாடைகள் சால்வைகள் தவிர 10,500 ரூபாய் யாத்திரை செலவுக்காக கொடுத்ததாகத் தெரிகிறது. (கடிதம் 41)

சுவாமிகள் புனாவிலிருந்து, நாஸிக் சென்றார். அங்கேயே கி.பி. 1767 ஆண்டு விதேக முக்தி அடைந்தார். பீஷ்வா இவர் நாசிக்கிலிருந்த போது ஏற்பட்ட கடன்களை தீர்த்தார்.

ஸ்ரீ ஸ்ரீ அபிநவ சச்சிதானந்த பாரதி (I) சுவாமிகளுக்குப் பின் அவரது சீடர் ஸ்ரீ (நான்காம்) நரசிம்ம பாரதி சுவாமிகள் பீடாதிபதியானார். அச்சமயம் பீஷ்வாவும் ஐதராபாத் நைஜாமும் ஹைதர் அலி மீது போர் தொடுத்தனர். இப்போர் நடக்கும் சமயத்தில் சுவாமிகள் சிர்ங்கேரிக்கு வந்து இருக்க முடியவில்லை. ஆனால் ஹைதர் அவருக்கு, சமஸ்தான நிலங்களை பாதுகாக்கவும், மற்ற தர்ம காரியங்களை கவனிப்பதாகவும் உறுதி அளித்தார் 1770ல் போர் முடிந்தது. சமாதான உடன்படிக்கை ஏற்பட்டாலும், சிர்ங்கேரி சாரதா பீட ஜகத்குரு சிர்ங்கேரி வரவேயில்லை. அவர் கி. பி. 1770 ஆம் ஆண்டு நாசிக்கிலே விதேக முக்தி அடைந்தார்.

சுமார் பத்து ஆண்டுகள் நாசிக்கிலிருந்து சிர்ங்கேரி ஜகத்குருக்கள் தர்ம பிரசாரம் செய்து வந்தனர்.

1770 ஆம் ஆண்டு சிர்ங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் ஜகத் குருவாக ஸ்ரீ ஸ்ரீ மூன்றாம் சச்சிதானந்த பாரதி சுவாமிகள், முப்பதாவது பீடாதிபதியாக பொறுப்பேற்று

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

முப்பத்து நான்கு ஆண்டுகள் தர்ம பிரசாரம் செய்து வந்தார். இவர் காலத்தில் மூன்றாம் மைசூர் போர் மூண்டது.

இவர் பொறுப்பேற்ற பின் ஹைதர், மடத்திற்கு, அரசு அலுவலர்களை தேவையான உதவிகளைச் செய்ய வேண்டுமென கட்டளைகளை (நிருபங்கள்) 1780ல் பிறப்பித்தார். †

ஸ்ரீ ஸ்ரீ (மூன்றாம்) சச்சிதானந்த பாரதி சுவாமிகள் காலத்தில் தான் பரசுராம் பாஹு என்ற மராத்திய குதிரை வீரன், சிர்ங்கேரியை கொள்ளையடித்தான். சுமார் 60 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பொருள்களை அவனுடைய கையாட்கள் எடுத்து சென்றதுடன், கோவில்களையும் கொள்ளையடித்தனர்.

உடன் திப்பு சுல்தான் சாரதாம்பாள் சிலையை புனருத்தாரணம் செய்யவும், கோவில் சீரமைப்புப் பணிக்காகவும் 400 ரஹதிகளும், சாரதாம்பாளுக்கு ஒரு பல்லக்கும் யானைகளையும் பட்டாடைகளும் அனுப்பினார் என சிர்ங்கேரி தஸ்தாவேஜுகளினின்று தெரிகிறது. *

திப்பு, தன் இறுதிகாலம் வரை ஜகத்குருவுடன் நல்ல சுமுகமான உறவு கொண்டிருந்ததை அவருடைய எல்லா கடிதங்களும் விளக்குகின்றன.

கி. பி. 1814 ஆண்டுக்குப் பின் வரிசையாக கி.பி 1954 வரை உள்ள பீடாதிபதிகள்.

31) ஸ்ரீ ஸ்ரீ (இரண்டாம்) சச்சிதானந்த பாரதி சுவாமிகள்
32) ஸ்ரீ ஸ்ரீ (ஏழாம்) ந்ருஸிம்ம பாரதி சுவாமிகள்

---

† Mysore Archaeological Report 1916-P.73
Page 60 The throne of Transcedental Wisdom by K. R. Venkataraman.

* திப்புவின் கடிதங்கள் SR 47-70

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

33) ஸ்ரீ ஸ்ரீ சச்சிதானந்த சிவ ாபி நவ ந்ருசிம்ஹ பாரதி சுவாமிகள்

34) ஸ்ரீ ஸ்ரீ (நான்காம்) சந்திர சேகர பாரதி சுவாமிகள்

ஞான பீடத்தில் தர்ம பிரசாரம் செய்தனர். இப்போது மகா சந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மகா சுவாமிகள் 35வது பீடாதிபதியாக ஞானஒளியை பரப்புகிறார். அவரது வழித்தோன்றல் ஸ்ரீ ஸ்ரீ சந்நிதானம் ஸ்ரீ பாரதி தீர்த்தர் 36வது பீடாதிபதி ஆவார்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நான்காம் அத்தியாயம்

சிர்ங்கேரி பீடாதிபதிகளுக்கு ஹைதர் அலியின் கடிதங்கள்

ஆதாரம்

ஸ்ரீ சிர்ங்கேரி ஜகத்குருவுக்கும் மைசூர் சுல்தான்களுக்கு மிடையே கடித போக்குவரத்து இருந்தது. சுமுகமான உறவிருந்ததை குருவம்ச காவியம், சிர்ங்கேரி மடத்தில் உள்ள தஸ்தாவேஜுக்கள், மற்றும் தந்தையும் மகனும் அனுப்பிய நிருபங்கள் மூலமும் தெரிகிறது. இந்த தஸ்தாவேஜுகள் கடிதா (Kadita) என்றும் கடிதம் என்றும் இரு வகைப்படும். கடிதா—கடதா என்றும் கூறப்படும். புளியங் கொட்டை பசையும் கரிப்பொடியும் தடவப்பட்டு, பெரிய அட்டையைப் போல் கெட்டியாக புத்தக வடிவில் இருக்கும் கடிதா. இவை ஆணை கடிதா (நிருபா) என்றும், பின்ன வட்டலே அதாவது பிராதுகள், விவரம் தெரிவிக்கும் கடிதா என்றும் பிரிக்கப்பட்டன. கடிதாவில் எழுத்துக்கள் வெள்ளை நிறமாக இருந்தன. இவைகளில் கணக்கு வழக்குகளும் எழுதப்பட்டுள்ளன.

நிருபங்களும், பின்னவட்டலே ஆகியவை சமஸ்தான நிகழ்ச்சிகளையும் வரலாற்றினையும் விவரித்துக் கூறுகின்றன. பெரும்பாலான கடிதங்கள் கன்னடத்திலிருந்தாலும் வட மொழி, மராத்தி, தமிழ், தெலுங்கு, பாரசீகம் ஆகிய மொழிகளிலும் இருப்பதைக் காணலாம்.

ஆனால் இவைகளின் தேதிகளை நிர்ணயிப்பது கடின மாக உள்ளது.

கடிதங்களை கடதாவிலிருந்து வித்தியாசப்படுவதற்காக கடிதங்களை லிகிதம் என்று குறிப்பிடுவோம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிர்ங்கேரிக்கும், மைசூர் சுல்தானுக்கும் இடையே நடந்த கடித போக்குவரத்து மொத்தம் 47 தஸ்தாவேஜுகள். அவை 15 கடதாக்களில் உள்ளன. +

இவையன்றி அமரர் K. R. வெங்கடராமன் அவர்களின் அரிய நூலான 'The Throne of Transcedental Wisdom' உம் A. K. Sastri அவர்கள் History of Sringeri ஆராய்ச்சி செய்ய உறுதுணையாக அமைந்து உள்ளன.

கடிதம் 42

இக்கடிதத்தின் பின்னணி

மராத்திய நாட்டுத் தலைவர் பீஷ்வா இரகுநாத ராவ் ஜகத்குரு அபிநவ சச்சிதானந்த பாரதி (I) அவர்களை தம் நாட்டிற்கு விஜயம் செய்யும்படி அழைத்தார். நவாப் ஹைதர் என்ன செய்தார்?

பீடாதிபதி அவர்கள் பூனாவுக்கு செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார். ஜகத்குருவின் பயணச் செலவுக்காக ரூ. 10,500-ம், சுவாமிகளுடன் செல்ல ஒரு யானை, ஐந்து குதிரைகள், ஒரு பல்லக்கு, ஐந்து ஒட்டகைகள் தவிர பல விலையுயர்ந்த வெகுமதிகளையும் பீடாதிபதி அவர்களுக்கு அனுப்பினார் என்பதை கூறும் இக்கடிதம் ஹைதர் அலியின் பரந்த உள்ளத்தையும், பீடாதிபதிகள்பால் கொண்டிருந்த பக்தியையும் பறைசாற்றும் அன்றோ? மத சார்பற்ற இந்த இந்தியரை வெள்ளையர் மதவெறி பிடித்தவர் என்று சொன்னது உண்மையாமோ?

ஹைதர் காலத்திய பீடாதிபதிகள் ஸ்ரீ அபிநவ சச்சிதானந்த பாரதி சுவாமிகள் (I) ஸ்ரீ (நான்காம்) ந்ருசிம்ம பாரதி சுவாமிகள், (மூன்றாம்) ஸ்ரீ சச்சிதானந்த பாரதி சுவாமிகள்.

+ A. K. Sastri-History of Sringeri Page 43

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 42

சிருங்கேரி பீடாதிபதிக்கு ஹைதர் அலி எழுதிய கடிதங்கள்.

கி.பி. 1760 - '61ல் சிருங்கேரி சுவாமிகளுக்கு ஹரிகத் மரிபத் மஞ்ஜுலத் நவாப் ஹைதர் அலி பகதூர் சலாம்.

சைத்ர பகுள-8-திந்நதக்கே

உங்களுடைய சாம்ராஜ்யத்தின் வைபவங்களுக்கும் அதிசயங்களுக்கும் அடிக்கடி விபரம் தெரிவிப்பதற்கு ஏற்பாடு செய்யவும். பாலாஜி பந்தர் மூலம் அனுப்பிய கடிதம் கிடைத்தது. விவரங்கள் எல்லாம் தெரிந்தன. நீங்கள் பெரியவர்களாக உள்ளீர்கள். தங்களை தரிசிக்க எல்லா மக்களும் விரும்புவது இயற்கையே. எனவே சாகேப் இரகுநாத ராவ் அப்பெரும் பேற்றை விரும்பி, தங்களை அனுப்பி வைக்கும்படி கேட்டுள்ளதால், தாங்கள் அவருக்கு தரிசனம் கொடுத்து திரும்பிவர வேண்டுகிறேன்.

இன்னும் அதிகமான விவரங்களை பாலாஜி பந்தரும், வெங்கட ரமணய்யாவும் சொல்வார்கள். உங்கள் பிரயாணத்திற்காக யானை ஒன்று, குதிரை ஐந்து, பல்லக்கு ஒன்று, ஒட்டகைகள் ஐந்து இராஜியுடன் அனுப்பப் பட்டுள்ளது.

தெய்வத்திற்கு ஒரு நிராஜி புடவையும், நிஷானிக்காக தாப்தா ஐந்தும், தங்களுக்கு 2 சால்வைகளும், செலவுக்காக 10,500 ரூபாயும் அனுப்பப்பட்டுள்ளன. பெற்றுக்கொள்ள வேண்டுகிறேன். வேஷ்டி ஜோடிகள் இரண்டும் அனுப்பப் பட்டுள்ளன. வைத்துக் கொள்ளவும்.

கடிதம் 43

சிருங்கேரி அபிநவ சச்சிதானந்த பாரதி சுவாமிகளுக்கு நவாப் ஹைதர் அலிகான் பகதூர் அவர்களுடைய சலாம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தாங்கள் அனுப்பிய நல்லாசி கடிதம் வரப்பெற்று எல்லா விவரங்களும் அறியப்பட்டன. வெகுமதியும் வந்து சேர்ந்தது. மடத்திற்கு நடந்துவரும் இனாம் யகராம் எல்லாம் சரியானபடி ஒழுங்காக நடக்க ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. உங்கள் மடம் உங்களுடையதே. வழக்கம்போல் மடத்தில் வந்து சுகமாக இருக்கும்படி செய்ய வேண்டுகிறேன். இப்பொழுது தங்களுக்கு அனுப்பியுள்ள வெகுமதியையும் பெற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

44 வது கடிதத்தின் பின்னே :

சிருங்கேரி பீடாதிபதி ஸ்ரீ முதலாம் அபிநவ சச்சிதானந்த பாரதி சுவாமிகள் கி. பி. 1767 வரை பீடத்தை அலங்கரித்தார். அவர் இரகுநாத ராவ் அழைப்பின் பேரில் பூனா சென்றார். பின்னர் நாசிக்குச் சென்று அங்கே சமாதி ஆனார். அவருக்குப் பின் வந்த ஜகத்குரு ஸ்ரீ ஏழாம் நரசிம்ம பாரதி சுவாமிகளும் நாசிக்கிலேயே பத்து ஆண்டுகள் தங்கிவிட்டார். அங்கிருந்தே தர்ம பிரசாரம் செய்து, அங்கேயே இறைவனுடன் கலந்தார்.

எனவே சிர்ங்கேரி ஜகத்குருக்கள் தம் நாட்டிலே போர் நடந்ததால் சிர்ங்கேரி வரவே இல்லை.

அடுத்த பீடாதிபதியான, ஸ்ரீ மூன்றாம் சச்சிதானந்த சுவாமிகள் சிர்ங்கேரிக்கு வந்து தங்கவேண்டுமென ஹைதர் வேண்டுகோள் விடுத்ததை அக்கடிதத்தில் காணலாம்.

கடிதம் 44

ஹேவிளம்பி சம்பவத்ஸர - கி. பி. 1777 - 1778

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ரஜாசாரியா வரியா ஆதி இராஜ தானி விஜயநகர மஹா ராஜதானி ரிச்யசிங்கபுர வரசித் தேஸ்வரா, துங்கபத்ர தீரவாசா ஸ்ரீமத் வித்யா சங்கர பாத

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பத்மராதாக ஸ்ரீ ந்ருசிம்ஹ பாரதி ஸ்வாமி குருக்கள் கமல ஜன்ஜாதாராதா சிர்ங்கேரி சச்சிதானந்தபாரதி * சுவாமி களுக்கு நவாப் ஹைதர் அலிகான் அவர்கள் செய்யும் சலாம்.

தாங்கள் அனுப்பிய எழுத்தோவியம் மூலம் எல்லா விவரங்களும் அறியப்பட்டன. தங்கள் தேசத்திலிருந்து புறப்பட்டு வந்து துங்கபத்திரா தீரமான ஹரக்கேரி தலத்தில் சாதுர்மாஸ்ய சங்கல்பத்திற்கு வரும் விவரத்தை தெரிவித்த தகவல் கேட்டு மிகவும் சந்தோஷமாயிற்று.

பிறர் நாட்டில் நீண்ட காலம் தங்கி இருந்து யாத்திரையின்போது சிரமப்பட்டிருக்கிறீர்கள். இப்போது திரும்பி வருவது சரியே. தாங்கள் சிரிங்கேரி மடத்திற்குப் போய் சேர்ந்து இறைவனுக்கு ஆராதனை முதலிய தவத்தை தொடர்ந்து செய்வதுடன், நல்லாசிகளையும் வழங்கிக் கொண்டு இருக்க வேண்டுகிறேன்.

தாங்கள் ஆசீர்வதித்து அனுப்பிய வஸ்திரங்கள் வந்து சேர்ந்தன. இப்பொழுது இங்கிருந்து இரண்டு சால்வைகள் அனுப்பப்பட்டுள்ளன. ஏற்கும்படி வேண்டுகிறேன். அவ்வப்போது யோக க்ஷேம (நலம் பற்றிய) விவரங்களை எழுத வேண்டுகிறேன்.

ஹேவிளம்பி சம்வத்ஸரம் சிராவண பகுள பஞ்சமி

கடிதம் 45

விகாரி — கி. பி. 1779 - 80.

நவாப் ஹைதர் கான் பகதூர் அவர்கள் விகாரி மாத சுத்த த்ருதீயை அன்று ஸ்ரீமத் அரண்மனையின்று நாட்டு எல்லைகளின் பாருபத்யாகர்களுக்கு எழுதி அனுப்பிய

---

* இவைகள் பீடாதிபதிகளுக்கு இருந்த சிறப்பு பெயர்கள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நிருபம் (ஆணை). இப்போது சிரிங்கேரி ஸ்ரீ மடத்தில் நடந்து வரும் ஸ்ரீ சரண காணிக்கை, அக்ர தாம்பூலம், ஆசார விவகாரங்கள் முதலானவைகளை முன்பிருந்தபடியே நடத்துவதற்காக, சிர்ங்கேரி ஸ்ரீ மடத்தார் தேவைகளை ஆராய்ந்து இந்த சேவைகளுக்குத் தேவையான ஸ்ரீ சரண காணிக்கை, அக்ர தாம்பூலம், தீபாராதனை காணிக்கை முதலானவைகளை தடையின்று வரவழைத்துக் கொள்ளவும் ஆணையிடப்படுகிறது.

முன்போலவே மடத்தின் வேலைகள் எவ்வித சிரமமுமின்றி நடத்திவரவே இவ்வாணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

இதுவே ஹைதர் சிர்ங்கேரி பீடாதிபதிக்கு அனுப்பிய கடைசி லிகிதமாக வெளியாகி உள்ளது.



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



ஐந்தாம் அத்தியாயம்

பாரதத்தின் தவப் புதல்வன் !



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பாரதத் தாய் எத்தனையோ வீரர்களை ஈன்றாள். அவ்வீரர்களை வளர்த்து உருவாக்கும் பணியில் அவள் பங்கு எத்துணை பெரியது! கி. பி. 1750ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் தேதி வெள்ளிக்கிழமையன்று பிறந்த அந்த திருமகனோ, பாரதத்தின் விடுதலைக்குக் உரிமைக் குரல் கொடுத்தார். மைசூரைப் பற்றி மட்டும் நினைக்காமல், பாரதத்தையே ஒட்டு மொத்தமாக பார்த்தவர் அவரே. தெய்வப் பணிக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட அவர் பாரதத் தாயின் விலங்கை நீக்க, அவள் தம் பணியில் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டார். ஆங்கிலேயரை இந்த புனித பூமியிலிருந்து விரட்ட, தனித்து நின்று போரிட்டு, தாயின் மடியில் குண்டு பாய விழுந்தார். அத்தகைய வீரத் திருமகன் இந்துவல்ல. முஸ்லீம்.

கீதையில் கண்ணன் வாக்குப்படி தனக்காக அன்றி, தன் ஒருவரின் நன்மையை மட்டும் கருதாமல், தன்னை ஈன்ற பாரதத் தாய்க்காக வீர சாகசம் புரிந்த அவர் யார்? அவர் தான் திப்பு சுல்தான்.

பதினைந்து வயது வரை, அவர் அறிவு வளர்ச்சியையே நாடினார். அவர் தம் தந்தையார் நாட்டை பேணி காக்கும் மன்னனாக அவரை வளர்க்கவில்லை. தன் எழுத்தறிவில்லா குறையை தன் மகன் மூலம் போக்கிக் கொண்டார். இளம் பிராயத்திலேயே இந்து சாஸ்திரங் களை கற்பிக்க, இந்து சாஸ்திர நிபுணர் கோவர்த்தன் பண்டிட்டையும், தம் சொந்த மதக் கோட்பாடுகளை தெளிவுற சொல்லிக் கொடுக்க மௌலவி உபேதுல்லா வையும் நியமித்தார். பண்டிட், திப்புக்கு சாஸ்திரம் மட்டும் கற்றுக்கொடுக்கவில்லை; வடமொழியில் தேர்ச்சி ஏற்படும்படி மட்டும் செய்யவில்லை. யோகத்திலும் பயிற்சிப் பெறச் செய்தார்.

"வாசலில் ஒரு ஏழை பட்டினியால் வாடும் போது, கதவை சாத்திக் கொண்டு பூஜை செய்தால் இது

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இறைவனின் வழிபாடாகவே இராது! அதே சமயம், ஒருவன் இறைவனின் அருளுக்குப் பாத்திரமாக வேண்டுமானால் மிகவும் தேவையானது இளகிய மனம். பிறர் துன்பத்தைக் காண சகியாதவனாக, அவர்கள் துயரை துடைக்கும் பண்பாளனாக இருந்தால், அவனுக்கு நிச்சயம் உய்வு உண்டு, இன்றேல் இல்லை, இல்லை, இல்லை!'' இக்கொள்கையையே அப்பிஞ்சு மனத்தில் நிலைக்கச் செய்தார்.

மௌல்வியோ திப்புவுக்கு சகிப்புத் தன்மையையும், பிற மதங்களை எள்ளாமல் இருத்தலையும், கற்பித்தார், அத்துடனன்றி பக்தி, இறை வணக்கம், சகோதரத்வம். தர்மம் ஆகிய இஸ்லாமிய மதத்தின் அரும்பெரும் கோட்பாடுகளைக் கற்பித்தார். உருது ஆகிய பல மொழிகளையும் கற்ற திப்பு பிற்காலத்தில் ஒரு அறிவுக்களஞ்சியமாக விளங்கினார். என்றால், அதற்கு அஸ்திரவாரமிட்டவர்கள் இவ்விரு மேதைகளே.

வெறும் ஏட்டறிவின்றி, திப்புக்கு தம்மிடம் பணிபுரிந்த காஜி கானை, குதிரையேற்றம், வில்வித்தை, போர்க் கலைகள், மல்யுத்தம் ஆகிய மற்ற உடற் கலைகளையும் கற்பிக்க ஹைதர் ஏற்படுத்தினார். திப்புவின் யோகாப் பியாச பயிற்சி இக்கலைகளில் வெகு சீக்கிரத்தில் தேர்ச்சி பெற பெரிதும் உதவியது.

குதிரையேற்றத்தில் தந்தை ஹைதருடன் சிறுவன் திப்பு தினமும் போட்டியிடுவான். திப்புவின் குதிரையோ சிறியது. ஹைதரின் குதிரை 'தில்குஷ்' அதிவேகமாக ஓடக் கூடிய ஒரு அரபுக் குதிரை. போட்டியில் தந்தை மகனை உற்சாகப்படுத்துவார். சில சமயம் கடுமையான போட்டி கூட நடக்கும். இவ்வளவு திறமையையும் திப்புவிற்கு அன்னை ஏன் வழங்கினாள்? தன் உரிமை குரலை எழுப்பவே. தந்தை ஹைதர் போர்களில் ஈடுபடும்போது முரட்டுத்தனமாக போரிடுவார். தப்பித் தவறி, தன்மை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பச்சாதாபம் அணுகிவிடாமல் பார்த்துக் கொள்வார். அதே சமயம் போரில் தம்மிடம் சரணடைந்த பகைவரை மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்துவார். போரில் இறந்த வீரர்களின் விதவைகளுக்கு ஆறுதல் கூறுவார். பொருளுதவி செய்வதற்கு தாமே நேரில் சென்று பாடுபடுவார். வென்ற பகுதிகளை தீக்கிரையாக்க மாட்டார். பொது மக்களை துன்புறுத்த மாட்டார்.

இந்த சீறிய பண்புகள் இளம் திப்புவின் மனத்தில் ஆழமாகப் பதிந்தன. தந்தையைக் காட்டிலும் மகன் இன்னும் அதிகப்படியாக அரிய பெரிய சிறந்த பண்புகளைத் தன்னிடத்தே வளர்த்துக் கொண்டார். 'பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே!' என அடிக்கடி தனக்கு சொல்லிக் கொண்டே, இச்சீரிய கொள்கையை வாழ்க்கையில் கடைபிடித்து, வெற்றியுங் கண்டார். நேர்மை, நாணயம், கண்ணியம், கட்டுப்பாடு, பொறுமை, தியாகம் இவை யனைத்தும் ஒன்று கூடி திப்பு சுல்தானாக உருப்பெற்றன என சுருக்கமாகக் கூறலாம்.

வள்ளுவர் வாக்கின்படி தமக்கு தீமை செய்தோரையும் கூட நன்மை செய்து அவர்களை நாணும்படி செய்வது அவரது அரிய பண்பு; பகைவர் தம் மனத்தில் நன்மதிப்பை பெறுமளவுக்கு பரந்த மனம் கொண்டவர் திப்பு. போரின் போது, மும்முரமாக அதில் ஈடுபட்டாலும், வெற்றியில் எவ்வித பெருமிதமும் கொள்ள மாட்டார். ஏன்? போரில் பாதிக்கப்பட்டவரைக் கண்டு இவர் தம் இளகிய மனம், உருகி, தவிக்கும். தோல்வியிலும் அவர் மனங்கலங்கவே மாட்டார்.

தம் வில்வித்தை குரு ஒருமுறை ஒரு பறவையை இலக்காக வைத்து, அம்பு எய்தும்படி கூறியபோது, திப்பு, உயிருள்ளவைகளை இலக்கு வைக்கக் கூடாதென்று கூறி, அம்பெய்தவே மறுத்து விட்டார் என்றால் அது அவருடைய சீரிய சிந்தனைக்குச் சிறந்ததொரு எடுத்துக் காட்டன்றோ?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

* * *

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பகைவரும் போற்றமாட்டாரோ ?

போரில் அடிபட்ட ஆங்கில படைவீரர்களும் தலைவர்களும் கூட திப்புவை இரகசியமாகப் போற்றினர். ஏன்? வெளிப்படையாகப் போற்ற ஆங்கில துரைகள் அனுமதிக்க மாட்டார்கள். தோல்வியுற்ற அவர்களை பண்புடன் நடத்தினார் திப்பு. படுதோல்வி அடைந்து, அடிபட்டு கிடந்த அவர்களுக்கு நல்ல வைத்திய சிகிச்சை கொடுக்கப் பட்டது. எதிரியைக் கூட போற்றி, பல சமயங்களில் புகழ்ந்தார் திப்பு. இது தவிர, அவர் தம் தேவைகளை உணர்ந்து தாராளமாக உதவி செய்ததற்கு, அன்னியர் பலர் போற்றினர். இது பற்றி பல கதைகளுமுண்டு.

1781 ல் கடுமையான போருக்குப் பின்னர் ஒரு கோட்டையைக் கைப்பற்றினார் திப்பு. சரணடைந்த சிப்பாய்களைக் கைது செய்தனர் திப்புவின் சேனைத் தலைவர்கள். அன்றே அவர் பெருமதிப்பு வைத்திருந்த ஒரு ஞானியின் பிறந்த நாள். திப்பு உடன் என்ன செய்தார்? கைதிகள் எல்லோரையும் எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்தார். அத்துடனா? தம் பொருட்களையும் எவ்வித தடையுமின்றி எடுத்துச் செல்ல ஆணை பிறப்பித்தார். ஆங்கிலேயர் இதைகேட்டு மூக்கில் விரல் வைத்தனர்.

இவ்வமயம் ஒரு ஆங்கில படைவீரன், திப்புவின் கருணை உள்ளத்தைப் போற்றினான், வாழ்த்தினான். தன்னிடமிருந்த ஒரு பச்சைக் கல்லை திப்புவுக்கு பரிசாக அனுப்பினான்,

சிறிது நேரம் சென்றது. அவனை அழைத்து வருமாறு பணித்தார் திப்பு. அவனுடைய பரிசுக்கு நன்றி தெரிவித்தவுடன் ஒரு பை நிறைய விலையுயர்ந்த கற்களும், 100 பொற்காசுகளையும் திப்பு பதிலுக்கு பரிசாக அளித்த போது ஆங்கிலேயன் வியப்பில் வாயடைத்துப் போனான். அது மட்டுமா?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

'என் படையில் நீ சேருகிறாயா?' என திப்பு கேட்ட போது, படைவீரன் திக்குமுக்காடினான். பின்னர் எப்படியோ சமாளித்துக் கொண்டு 'நான் என்றென்றும் ஆங்கிலேயர் ஒருவருக்கே பணி புரிவது என உறுதி பூண்டுள்ளேன். எனவே தங்களிடம் பணி செய்ய வர இயலாது' என திணறியபடி பதிலுரைத்தான்.

அவன் கூறியதை மொழி பெயர்த்தவர் அவனை முட்டாள் என்று திட்டினார்.

இது கேட்ட திப்பு "இந்த அரசவை இத்தகைய முட்டாள்தனத்திற்கு மதிப்பு கொடுக்கிறது" எனக் கூறி கையிலிருந்த விலையுயர்ந்த மோதிரத்தை பரிசாக அளித்தார் அந்த ஆங்கில சிப்பாய்க்கு.

* * *

காரிகையின் கதை

ஒரு போர் முடிந்தபோது, திப்புவுக்கு ஒரு ஆங்கில பெண்மணி கடிதமொன்று எழுதினார். கடிதத்தில் தம் கணவர் போரின்போது காணாமல் போய்விட்டதாகவும், அவர் ஒரு படையின் உப-தலைவன் என்றும் குறிப்பிட்டார். அவரைப் பற்றிய தகவலைத் தனக்கு தெரிவிக்கும்படி மிகவும் உருக்கமாக வேண்டினார். தம் கணவரை அவர் கண்டுபிடிக்க முடிந்தால், அவர் தம் மனைவி, என்றும் அவரிடமே மாறாத அன்பும் பக்தியும் கொண்டவளாக இருப்பதாகவும் கூறி, அவர் தம் நான்கு வயது மகனின் அன்பையும் தெரிவிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொண்டார்.

கண்டார் திப்பு இக்கடிதத்தை. பின்? உப தலைவனை விடுதலை செய்யும்படி உத்தரவிட்டார். கண்ணீர் கவிதை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

எழுதிய காரிகைக்கு முத்தாரம் ஒன்றை பரிசாகவும், சிறுவனுக்கு பற்பல பொம்மைகளையும் பரிசாகக் கொடுத்து பிரிந்த குடும்பத்தைச் சேர்த்து வைத்தார்.

தம் நன்றியைத் தெரிவித்து மீண்டுமொரு கடிதம் எழுதினார் அந்த ஆங்கில பெண்மணி. திப்புவை தம் அவர் புகைப்படத்தை அனுப்புமாறு கோரினார்.

தங்க முகப்பு போட்ட தன் புகைப்படத்தை திப்புவும் அனுப்பினார். புகைப்படம் மட்டும் அம்மையாருக்கு போய் சேர்ந்தது. அதனுடைய தங்க முகப்பு (Frame) கம்பெனி அதிகாரியின் வீட்டை அலங்கரித்தது.

திருமண பரிசு

திப்புவுக்குத் திருமணம். திருமண பரிசாக என்ன வேண்டுமென்று கேட்டார் ஹைதர். திப்புவின் பதில் ஹைதரை வியப்பில் ஆழ்த்தியது. திப்பு கேட்டதென்ன?

''அரிய, சிறந்த நல்ல நூல்கள் கொண்ட ஒரு பெரிய நூல் நிலையம் ஸ்ரீரங்கப்பட்டினத்தில் வைத்துத் தர வேண்டும்'' எனக் கேட்டார். 'அந்த பரிசு என்றும் அழியாமல் நிலைத்து இருக்கக் கூடிய பெருஞ்செல்வம்' என்று விளக்க மும் கூறினார்.

உடனே பிரெஞ்சு நாட்டுக்கு பறந்தது ஒரு கடிதம். பிரெஞ்சு நாட்டு வெளி உறவு மந்திரி அக்கடிதத்தைக் கண்டார். அதில் கண்டபடி நூல் நிலையத்திற்கு ஆலோசனைக் கூற தகுந்த ஒரு நபரை தேர்ந்தெடுத்தார். பிரெஞ்சு நாட்டு கலாசாரம். இலக்கியம், கலை, சித்தாந்தங்களில் தேர்ச்சி பெற்றவராக அவர் அமைந்தார். நூல்கள் பல சேகரித்து அனுப்பப்பட்டன.

பாரசீகத்தில் மொழி பெயர்க்கப்பட்ட 'அமெரிக்காவின் சுதந்திர பிரகடனமும்' இதில் இடம் பெற்றது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அழியாச் செல்வம் என திப்பு கருதிய இப்பெரும் அறிவு களஞ்சியத்தை அழித்தவர் யார் தெரியுமா?

ஸ்ரீரங்கபட்டினத்தை சூழ்ச்சியால் கைப்பற்றிய, நாகரீகம் படைத்த ஆங்கிலேயரே !

தன்னருமை வீர மைந்தனை ஏந்திய பாரத அன்னை ரத்தக் கண்ணீர் பெருக்கினாள். ஏன் அவன் இறந்து விட்டானே என்றா? இல்லை. பின்? மக்களுக்காக மக்களுக்கெனவே வாழ்ந்த திப்பு உருவாக்கிய அந்த அழியாச் செல்வம் நூல் நிலையத்தை ஆங்கிலேயர் தீக்கிரையாக்கி விட்டனரே என்று குமுறி குமுறி அழுதாள்.



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆறாம் அத்தியாயம்

மைசூர் புலி



திப்புவுக்கு மற்றொரு சிறப்புப் பெயரும் உண்டு. வெள்ளையர் அப்பெயர் கொண்டே அவரை அழைத்தனர். 'Tiger of Mysore' அதாவது 'மைசூர் புலி'யென்றே அவரை குறிப்பிட்டனர். தம்முடைய ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பை தெரிவித்த ஒரே இந்தியன் என்பதால் அவ்வாறு விளித்தனரா, இல்லை, கடைசி வரை புலியைப் போல பாய்ந்து போரிட்டு உயிர் துறந்தார் என்பதை போற்றி அவ்வாறு அழைத்தனரா என்றும் கூற இயலவில்லை இல்லை: அவர் தம்மை புலியாக பாவித்து ஆங்கில சிப்பாய் ஒருவனை அடிப்பது போலிருந்த ஒரு மாதிரி சின்னத்தைக் கண்டு அவ்வாறு அழைத்திருப்பார்களோ?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகக் கூறமுடியும். திப்புவின் கொடி புலிக்கொடி. மேல் உடையிலும் ஒரு பாயும் புலி இடம் பெற்று இருந்தது. இதன் காரணமாகவே அவ்வாறு அழைத்தனர் போலும்.

வேறு எந்த சின்னத்தையும் தேர்ந்தெடுக்காமல் இந்த புலிச் சின்னத்தை ஏன் திப்பு தமக்கு வைத்துக் கொண்டார்? இதற்கும் காரணமுண்டு.

சோதனையில் சமநிலை

ஹைதர் மைசூரின் முழு பொறுப்பை எடுக்கு முன்பு அவருக்கு ஒரு பெருஞ்சோதனை ஏற்பட்டது. அரண்மனையில் பெரியதொரு சூழ்ச்சி! ஹைதர், ஒரு சில நண்பர்களுடன் தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ள தப்பி ஓடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அச்சமயம் ஸ்ரீரங்கப்பட்டின கோட்டையில் இரு சிறுவர்களே இருந்தனர். ஒருவர் திப்பு. மற்றொருவர் அவர் தம்பி கரீம். அவர்கள் தாயார், உறவினர்கள் இல்லத்திற்கு சென்றிருந்தபடியால் இவ்விரு சிறுவரும் தனித்து விடப்பட்டனர். கலகக்காரர்கள் என்ன செய்தார்கள்? பத்து வயது திப்புவையும், ஐந்து வயது கரீமையும் கோட்டையின் மேல் பகுதியிலிருந்த ஒரு அறையில் இரகசியமாக காவலில் வைத்தனர்.

கலகக்காரர்கள் இச்சிறுவர்களை கொடுமைப்படுத்தவில்லை. அவர்கள் என்னென்ன பொருள் வேண்டுமோ அவைகளையும் எடுத்துச் செல்ல அனுமதித்தனர். என்றாலும் அவர்களை அடைத்து வைத்திருந்த அறையில் கூரைக்கு சற்றுக் கீழே இருந்த சிறிய ஜன்னலைத் தவிர வேறெதுவும் இல்லை. எனவே காற்று வரவே வழியில்லை. இருட்டு, இருட்டு, எங்கும் இருட்டு! அறையுள் இச்சிறுவர்களுக்கு ஒரு பணியாள் அனுமதிக்கப்பட்டிருந்தான். திப்பு அவன் தோளில் ஏறி, அச்சிறு ஜன்னல் வழியே வெளியே பார்த்தார். அங்கு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இருந்த இரும்புக் கம்பியை கையால் உடைத்தெறிய பார்த்தார். முடியவில்லை. பின்னர், தமக்குக் கொடுக்கப்பட்ட போர்வைகளை சேர்த்து கட்டி ஒரு நூலேணி அமைத்தார். மிகவும் சிரமப்பட்டு கீழே பார்த்த போது அவருக்கு என்ன தெரிந்தது? தாம் கீழே குதிக்க முடியாது. குதித்தால் கீழே 100 அடிக்கு மேல் குப்புற விழவேண்டி வரும். அதுவும் பரவாயில்லை என துணிந்தால் வழியில் இருந்த கண்ணாடி துண்டுகள் பதித்த மதில் சுவரில் அடிபட்டு தான் விழ வேண்டும்.

ஆகவே என் செய்வது என யோசித்தார்.

தம் ஆசிரியர் ஒபேதுல்லா அப்போது மசூதிக்குத் தொழுகைக்குச் செல்வார் என அவர் நினைவுக்கு வந்தது. எனவே அங்கேயே நூலேணியை பிடித்துக்கொண்டு காத்திருந்தார். அச்சமயம் தொழுகைக்குச் சென்ற ஒபேதுல்லாவுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. அவருக்குச் சற்று தொலைவில் ஒரு அம்பு வந்து விழுந்தது. அதில் ஒரு முக்கிய செய்தியும் இருந்தது.

சிறுவர்கள் சிறைப்பட்டிருந்த இடம் தெரிந்தவுடன் ஒபேதுல்லா ஓடினார், காஜி கானை சந்தித்தார். உடனடியாக ஹைதரின் மனைவியிடம் அவருடைய மக்களைப் பற்றி கூறும்படி சொன்னார். ஆனால் காஜிகானோ தகவல் கொடுக்க வேறொரு நம்பிக்கையான ஆளை அனுப்பினார்.

இரவு, ஒருவன் பெரியதொரு ஏணியைக் கொண்டுவந்து சுவரில் மேல் சாத்தினான். விறுவிறுவென மேலே ஏறிய அவன் அங்காங்கே ஆணிகளை சுவரின்மீது அடித்தான். சத்தம் கேட்டு பணியாள் விழித்துக் கொண்டான். துயிலினின்று எழுப்பப்பட்ட திப்பு, நாலேணியில் விறுவிறுவென ஏறினார். அச்சிறு ஜன்னல் மூலம் வீசி எறியப்பட்ட தாம்பு கயிற்றை பிடித்தார். அவரும் பணியாளும் சேர்ந்து இழுக்க கயிற்றைக் கட்டிலில் இறுக்கமாகக்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கட்டினர். கயிற்றின் நுனியிலிருந்த கத்தியால் ஜன்னல் கம்பியை திப்பு நீக்கினார். சத்தம் வெளியே இரும்புக் கதவுக்கு பின்னால் இருந்த காவலாளிகளுக்கு கேட்காமல் இருப்பதற்காக பாவம், அந்த பணியாள் எத்தனை முறை இருமினான்! திப்புவுக்கு தெய்வமும் இப்போது உதவியது எனலாம். 'ஓ'வென பெருமழை பலத்த இடியுடன் பெய்தது. கட்டிலில் ஒரு முனையைக் கட்டிய பின் பணியாள் திப்புவின் முதுகில் ஒரு தூளியை போர்வைகளைக் கிழித்து கட்டினான். கரீமை அந்தத் தூளியில் வைத்துக் கொண்டு திப்பு நூறு அடிக்கு மேலிருந்த இடைவெளியை கயிற்றை பிடித்துக் கொண்டு இறங்கினார். அவர் கைகளில் இரத்தம் வடிந்தது. கரீம் இதனைக் கண்டான்; அண்ணனின் சிவப்பேறிய கைகளை முத்தமிட்டான்.

அச்சிறு ஜன்னல் வழியே வர இயலாத பணியாள் கயிற்றை சுற்றி கீழே எறிந்து விட்டான். மறுநாள் சிறுவர்கள் தப்பிய விவரம் கலகக்காரர்களுக்கு எட்டியது. பணியாளும் மற்றவரும் கொல்லப்பட்டனர்.

சிறுவர்களுக்கு வலைவீச்சு

இச்சிறுவர்கள் எங்கே மாயமாய் மறைந்திருக்க முடியும் என கலகக்காரர் வலை வீசினர். இரவோடு இரவாக இச் சிறுவர்களை சிர்வணி நதிக்கரைக்கு அழைத்துச் சென்றார் காஜிகான். அங்கே, ஒரு மிகவும் பழைய உளுத்துப்போன படகு நின்றிருந்தது. குழந்தைப் பருவத்திலேயே இறந்து விடும் குழந்தைகளை அக்காலத்தில் புதைக்கமாட்டார்கள். இப் பகுதியில் படகில் குழந்தையின் சடலத்தை எடுத்து வந்து, தண்ணீரில் போட்டு விடுவார்கள் தற்போது அவ்வழக்கம் இல்லையென்றாலும், முந்திய நிகழ்ச்சிகளை நினைவூட்டும் வகையில் இருந்தது, இந்த படகு. இந்தப் படகின் பாதி மேலே மறைக்கவும்பட்டிருந்தது. இதனடியில் காஜிகானும், இரண்டு சிறுவர்களும் கொட்டும் மழையில் இரவைக் கழித்தனர்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொழுது விடிந்தது. சிறுவர்களுக்கு உணவு கொண்டு வர காஜிகான் தன் மனைக்குள் சென்றாரோ இல்லையோ, அவர் வீட்டுக் கதவைக் பலமாக கலகக்காரர்களின் ஆட்கள் தட்டினர். காஜி உடன் அவசரமாக ஒரு செய்தியை எழுதினார். தம் அண்டை வீட்டிலிருந்த லாலா மியானின் ஜன்னல் கதவை கோலால் தட்டி லாலா மியானின் மகள் ருக்காயா பானுவிடம் கொடுத்தார்!

'உன் தந்தை வந்தவுடன் மறக்காமல் கொடுத்து விடு!' என்றார்.

சிறுமி மள மளவென கதவை தாளிட்டாள். அதே சமயம் வாசல் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே புகுந்த ஆட்கள், காஜிகானை கைதியாக அழைத்துச் சென்றனர். ருக்காயா இக்காட்சியைக் கண்டாள். தன் தந்தை வந்ததும் செய்தியைக் கொடுத்தாள். லாலா மியான் அச்செய்தியைப் படித்தார். ஆனால், அச்சிறுவர்களுக்கு எந்த உதவியும் செய்ய மறுத்தார். ஏன்? நாளை காஜிகானுக்கு ஏற்பட்ட கதி தனக்கும் வந்துவிட்டால்? என்ற பயமே காரணம். ருக்காயா இச்செய்தி பற்றி ஒன்றும் பேசக்கூடாதென்று கட்டுப்படுத்தினர். ருக்கயா மனமோ அச்சிறுவர்களையே சுற்றியது.

இருட்டிலே வெளிச்சம்

இரவு, நல்ல இருட்டு; ஒரு சிறு உருவம் சிர்வணி நதிக் கரையை நோக்கி போய்க்கொண்டிருந்தது. கரடு முரடான அந்த நீண்ட பாதையை கடக்கும்போது, திடீரென்று நிழலைக் கண்டால் நடுநடுங்கி நிற்கும் அவ்வுருவம். சலசலப்பு கேட்டாலோ, அவ்வளவு தான்! மண்டியிட்டு தெய்வத்தைப் பார்த்து பிரார்த்தனை செய்யும்! எப்படியோ அந்த ஐந்து மைலையும் கடந்து அவ்வுருவம் அப்படகை அணுகியது. 'சாவு' என்றாலே பயந்து, அப்பகுதி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அருகே பெரியவர் கூட போகப் பயப்படுவார்களே, அங்ஙனமிருக்க, இவ்வளவு தூரம் கடந்த அவ்வுருவத்தின் துணிச்சல் தானென்ன !

படகை அணுகிய உருவத்தைக் கண்டு திப்பு முதலில் திகைத்தார். வந்தது யார்? ஏழே வயதான ருக்காயா பானு. 'காஜி கான் அனுப்பினாரா?' என்ற திப்புவின் கேள்விக்கு ருக்காயா தலையசைத்தாள்.

திப்பு அவளுக்காக அப்படகில் ஒரு இடத்தின் தூசியை தட்டினார். அவர் வேண்டுகோளுக்கு இணங்க, அவள் உட்கார நினைத்தபோது தன் கையில் இறுக்கிப் பிடித்திருந்த கூடை நினைவுக்கு வந்தது.

தன்னிடம் கொடுத்த கூடையை பார்த்தார் திப்பு. குனிந்து தன் கையை சுத்தமாக கழுவிக் கொண்டார். கூடையிலே உணவுப் பொருட்கள் ஒன்றுகக் கலந்து இருந்தன; என்றாலும் காலையிலிருந்து பசியால் வாடிய சிறுவர்களுக்கு அது தேவாமிருதமாக ருசித்தது. ருக்காயாவின் சட்டைப் பையிலிருந்து விழுந்த இனிப்புகளோ இன்னும் அதிகமாக இனித்தன.

மறுநாள் தம் மகளைக் காணாது லாலா மியான் தம்பதிகள் கலங்கினர். எதற்கும் படகுக்குச் சென்று பார்க்கலாம் என்று போனபோது, திப்புவின் அணைப்பில் சிறுமி தூங்குவதைப் பார்த்து, நிம்மதியான பெருமூச்சு விட்டார் லாலா மியான். தன் மகளை தன்னுடன் வரும்படி விளித்தார். மகளோ அவ்விரு சிறுவர்களையும் தன்னுடன் வரும்படி அழைத்தார். மியானின் உள்ளம் நெகிழ்ந்தது.

சிறுவர்களைக் கூட்டத்தில் அழைத்துச் சென்றால் ஆபத்தல்லவா? மக்கள் நெருக்கமுள்ள பகுதிகளில் சென்று, அவர்களை [illegible]டுக் கொண்டால்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

என் செய்வது? யோசித்தார். கூட்டமில்லாத சற்று சுற்று வழியில் சென்று பல்லக்குகளில் சென்று விடுவதென தீர்மானித்தார்.

நாமொன்று நினைத்தால்...

அன்று ஹோலி பண்டிகை. இந்துக்கள் முஸ்லீம்கள் என்ற வேற்றுமையின்றி மக்கள் விழாவைக் கொண்டாடினர். யார் சென்றாலும் இரு மதத்தினரும் பாரபட்சமின்றி பலநிற சாயநீரை ஒருவர்மீது ஒருவர் தெளித்தனர். பல்லக்கு தேடிச்சென்ற இடத்தில், பல்லக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. எல்லோரும் உற்சாகமாக பண்டிகையை விமரிசையாகக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். மியான் மனத்தில் திடீரென ஒரு மின்னல்! விறுவிறுவென அருகிலிருந்த ஒரு கடைக்குச் சென்றார். பலவித சாயங்களை வாங்கினார். பீச்சாங் குழலும் வாங்கினார். முகமூடியும் வாங்கினார், குழந்தைகளுடன் ஹோலி பண்டிகை விளையாட்டு விளையாடினார். குழந்தைகள் உடம்பெல்லாம் பலவித நிறம்! முகமோ சொல்லவே வேண்டாம். இவ்வேஷத்தில் வீட்டிற்குள் வந்த தன் கணவனையும், குழந்தைகளையும் வரவேற்றார் ருக்காயாவின் அன்னை.

திப்பு "மிக்க நன்றி! மாமா!" என அவருக்கு நன்றி கூறினார்.

புலி, புலி, புலி !

வீட்டிலேயே குழந்தைகளுக்கு ஒரே கொண்டாட்டம். தெருவில் வரும்போது திப்பு அணிந்திருந்த முகமூடியை அணியும்படி ருக்காயா திப்புவைக் கேட்டுக் கொண்டாள். திப்பு அந்த முகமூடியைப் பார்த்தார்.

அது ஒரு 'புலி!'

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இந்த முகமுடியை திப்பு தனக்கு வேண்டுமென கேட்டபோது, மியான் மகிழ்ச்சியோடு சம்மதித்தார். பல வர்ணங்களினால் நிறம் மாறிய அம் முகமூடி, திப்புவின் மனத்தை நிறைத்தது.

இப்புலியுடன் சிறுவர் கைக்கொட்டி விளையாடினார். "வீரமுள்ள புலி! அழகான புலி!" என விளையாட்டில் பலமுறை கூவின. அன்றிரவு காஜி கான் வீடு திரும்பினார். விவரமறிந்தார். ஆனால் சிறுவர்களை பாதுகாப்பாக பெற்றோரிடம் சேர்க்க வேண்டுமே?

மறுநாள் ஒரு முக்கியமான புள்ளியின் வீட்டில் திருமணம். பல பல்லக்குகள் இத்திருமணத்திற்கு செல்ல ஆயத்தமாக வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. மியான் வந்தார். பல்லக்கு தூக்குவோரை அருகிலிருக்கும் உணவு விடுதிக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு வரும்படி காசு கொடுத்தார். முக்காடிட்ட ஒரு முஸ்லீம் மாதரசியையும், ஒரு ஐந்து வயது சிறுமியையும் அழைத்துக் வந்தார். பல்லக்கில் மூவரும் ஏறினர் இருப்பிடம் சேர்ந்தார். முஸ்லிம் பெண்மணி யார் தெரியுமா? திப்பு! இந்த புலி முகமூடி, தங்கம், வெள்ளி, பித்தளை, மரம், கல் ஆகிய பலவற்றிலும் உருப் பெற்றது.

சிறுமி ருக்காயா பானுவே திப்புவை மைசூரின் புலியாக மாற்றினார் என்றால் மிகையாகுமா? ஆனால் மைசூர் புலிக்கும் நிஜபுலிக்கும் ஒரு பெரிய வித்தியாசமுண்டு. மைசூர் புலிக்கு இளகிய மனமுண்டு. கொலைவெறி கிடையாது. ஆனால் நிஜமான புலியோ பாயும், இரையுடன் விளையாடும் எதிர்பாராத சமயத்தில் அடித்துக் கொல்லும். பகைவரையும் மதிப்புடன் நடத்திய மைசூர் புலிக்கு இணையர்க யாரை உவமைக் கூற முடியும்?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஏழாம் அத்தியாயம்

திப்புவும் இந்து மதமும்



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

திப்புவின்
கி. பி. 1787ன்
முக்கிய பிரகடனம்

இப்பிரகடனம் எம்மதமும் சம்மதம் என்ற பரந்த மனத்தையும், சீரிய கொள்கையையும் பிரதிபலிக்கிறது.

'பிற மதங்களிடம் சகிப்புத்தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பது குர்ரானின் முக்கிய கோட்பாடு.

குர்ரான் வற்புறுத்தி வலுக்கட்டாயமாக பிறரை மதமாற்றம் செய்வதை ஆதரிக்கவில்லை. மற்ற தெய்வங்களின் சிலைகளை இழிவாகக் கூறுவதையும் ஏற்கவில்லை. அப்படி இழிவாகக் கூறினால், அது அல்லாவையே இழிவுபடுத்துவதாகும்.

அதே போன்று, பிற மத, விற்பன்ன்றகளுடன் அநாவசியமாக அவர்கள் மதக் கோட்பாடுகளைப் பற்றி விவாதம் கூடாது. தவறு செய்வோரை தவிர்த்து வேறு எவரிடமும் விவாதம் கூடாது. குர்ரான் நற்காரியங்களைச் செய்யும்போது மட்டும் போட்டி போட்டுக் கொண்டு செய்யச் சொல்கிறது. நமக்கு பின்பற்றி நடக்க ஒரு புனித சட்டம் உள்ளது. அல்லா விரும்பியிருந்தால் உலகம் முழுவதையுமே (தன்) ஒரே ஒரு மதத்தைச் சார்ந்தவராகச் செய்திருக்கலாம். அதனால் நற்காரியங்கள் செய்வதில் மட்டும் போட்டியிட வேண்டும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

குர்ரான் உங்களை பிறமத விற்பன்னரிடம் என்ன சொல்லச் சொல்கிறது? நாங்கள் எங்களுக்கு அறிவிக்கப்பட்ட உண்மைகளை நம்புகிறோம். அதேபோல் உங்களுக்கு கொடுக்கப்பட்ட உண்மைகளையும் நம்புகிறோம். எங்கள் கடவுளும் உங்கள் கடவுளும் ஒன்றே. அந்த ஒரே கடவுளிடம் சரண் அடைகிறோம்.

கடவுளின் ஆணைகள் மனிதனின் கௌரவம், சிந்தனை, சகோதரத்வம் ஆகியவைகளை அஸ்திவாரமாகக் கொண்டவை. நாம் மிக்க அக்கறையுடனும் மதிப்புடனும் இந்துக்களின் வேதங்களை ஊன்றி படித்திருக்கிறோம். அவை உலக ஒற்றுமை என்ற கொள்கையை அடித்தள மாகக் கொண்டவை. கடவுள் ஒன்றே என்றும், அவர் பல பெயர்கள் உடையவர் என்றும் கூறுகின்றன.

நம் நாட்டின் எல்லைக்குள் புகுந்து, தெய்வீகத்திற்கு மாறான, பொய்யான தத்துவங்களைப் போதித்து பல மதங்களிடையே வெறுப்பையும் காழ்ப்பையும், மதம் என்ற பெயரில் ஒரு கூட்டம் புகுத்துவது பெரும் வேதனையைக் கொடுக்கிறது.

எனவே நாம், இன்று முதல், மைசூர் இராச்சியத்திலும், வெவ்வேறு இடங்களிலுள்ளன நம் மைசூர் நாட்டவர் களுக்கும், மத வேற்றுமை, ஜாதி வேற்றுமை, வர்க்க வேற்றுமை ஆகியவற்றை சட்ட விரோதமானவை என பிரகடனம் செய்கிறோம்!' *

இதனால் நமக்கு ஒரு விவரம் தெளிவாகிறது. மதம் என்ற பெயரில் குழப்பம் விளைவித்தவர் யாரென்றும் ஊகிக்க முடிகிறது. என்றாலும் இதை விட முக்கியமாக ஆராயவேண்டியது, திப்பு சுல்தான் இப்பிரகடனத்தை எவ்வளவு தூரம் கடை பிடித்தார் என்பது தான்.

இதைப் பற்றி அறிய சிர்ங்கேரி ஜகத்குருவுக்கு திப்பு சுல்தான் எழுதிய கடிதங்கள் பேருதவி செய்கின்றன.

---

* 229 Page The Sword of Tipu Sultan by Gidwani

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

திப்புவின் கடிதங்கள் - ஒரு வர்ணனை

திப்புவின் கடிதங்கள்

கையால் செய்யப்பட்ட (Hand made) காகிதங்களில் எழுதப்பட்டிருந்தன. இக்காகிதங்களின் நீளம் 39.2 செ.மீ. அகலம் 14.5 செ.மீ. இதன் மேல் தங்கத்தில் 'சூரியன்' சின்னமாக பதிப்பிக்கப்பட்டிருந்தது.

இச்சின்னத்தின் நடுவில் அராபிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்குருந்தன.

காகிதத்தின் நிறம் ரோஜா நிறம்.



இந்து மதத்தை ஆதிசங்கர பகவத் பாதர் முதற்கொண்டு பிரசாரம் செய்து வந்த நான்கு பீடங்களுள், சிர்ங்கேரி சாரதா பீடம் முதன்மையானது. மிகவும் தொன்மை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வாய்ந்தது. விஜயநகர காலத்தில் இந்து மத விளக்கமே சிர்ங்கேரி ஸ்ரீ சாரதா பீடம் என்றளவுக்கு உயர்ந்ததால், இந்து மதம் என்றால் சிர்ங்கேரி ஸ்ரீ சாரதா பீடம் என அனைவரும் ஏற்றதை திப்பு சுல்தானும் ஏற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

திப்பு சுல்தான் சிர்ங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி அவர்களுக்கு எழுதிய கடிதங்கள்.

வரலாற்றுப் பின்னணி

மூன்றாம் மைசூர் போர்.

இப்போரில் மும்முனை தாக்குதலுக்கு திப்பு ஈடுகொடுத்தார். நைஜாம், ஆங்கிலேயர், மராத்தியர் ஆகிய மூவரும் ஒன்றுசேர்ந்து மைசூரின் மீது படையெடுத்தனர். எனினும் திப்பு பலவிடங்களில் வெற்றியே பெற்றார். இச்சூழ்நிலையில் எழுதிய கடிதங்களை இனி பார்ப்போமா?

கி. பி 1790லிருந்து 1799 அதாவது தான் அமரராகும் வரை சிர்ங்கேரி ஜகத்குரு - ஸ்ரீ சச்சிதானந்த பாரதி சுவாமிகள் - (III) அவர்களுக்கு 21 கடிதங்கள் (46-66) எழுதியதாக தெரிய வருகிறது. *[1] இவையன்றி கடிதா என சொல்லப்படும் மற்ற முக்கியத்வம் படைத்த வரலாற்று ஏடுகளும், *[2] திப்புக்கு இருந்த 'எம்மதமும் சம்மதம்' என்ற பரந்த மனத்தையும், ஜகத்குருபால் அவர் வைத்திருந்த பக்தியையும் மதிப்பையும் காட்டுகின்றன.

---

* [1] Introduction — XXVII — Selections from the Records of Sringeri Mutt'' by Late Mr. Rajakaye Prasaktha B Ramakrishna Rao. Mysore — d/30 Sept 1926.

* [2a] சிர்ங்கேரி தஸ்தாவேஜுகள்
[2b] History of Sringeri by A. K. Sastry

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அது மட்டுமா, காஞ்சி கோயில் ஹைதர் அலி போர் தொடுத்த போது பழுது பட்டது. அக்கோயிலை புனருத்தாரணம் செய்ய சிர்ங்கேரி ஜகத்குரு ஸ்ரீ (மூன்றாம்) சச்சிதானந்த சுவாமிகள் காஞ்சியில் இருந்தார். அவருக்கு இப்பணியில் உதவியவர் திப்பு. *3



* 3 The Throne of Transcedental Wisdom - Page No. 61

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 46

சாதாரண சம்வத்சரா கி. பி. 1790-91

ஸ்ரீமத் பரமஹம்ச பரிவராஜகாச்சாரியரான சிர்ங்கேரி சச்சிதானந்த பாரதி சுவாமிகளுக்கு திப்பு சுல்தான் பகதூர் அவர்கள் செய்யும் சலாம்.

இப்போது விரோதிகளின் சைன்யம் நாட்டிற்குள் புகுந்து மக்கள், கால்நடைகளுக்கு உபத்திரவம் கொடுப்பதால் அவர்களுக்கு தண்டனை விதித்துக் கொண்டிருக்கிறோம். தாங்கள் பெரியவர். தவம் செய்வோர். எல்லா மக்களுடைய நலனை நினைத்தே செய்வீர்கள். அத்துடனன்றி, விரோதிகள் எல்லோரும் தோற்று, ஓடும்படியும் நம் நாட்டு மக்களனைவரும் நலமுடன் இருக்கும்படியும், தாங்கள், தங்கள் மடத்தின் பிராம்மணர் துணையுடன் ஈசுவர பிரார்த்தனை செய்து, எல்லோரும் பாதுகாப்புடன் இருக்கும் படி ஆசீர்வாதம் செய்ய வேண்டும்.

தாரிக் 30 - மாஹே ரப்பானி சால்
சாதா சன் 1218, மகமத்
சாதாரண சம்வத்சரா.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

முன் நிகழ்ச்சி

மூன்றாம் மைசூர் போரின் போது ஒரு அசம்பாவிதமான நிகழ்ச்சி நடந்தது. ஆங்கிலேயருக்கு திப்பு சுல்தானை எப்படியும் அழிக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோள். அதற்காக நைஜாமையும், மராத்தியரையும் தங்களுடன் உடன்படிக்கை செய்துக் கொள்ளும்படி செய்தனர். இந்த மும்முனை தாக்குதலுக்கு மைசூர் உட்பட்டிருந்தபோது, திப்புவின் மீது பழி வாங்கும் உணர்ச்சியுடன், பரசுராம் பாஹூ என்ற மராத்திய படைத்தலைவன் பிட்நூறு என்ற பகுதியின் மீது படையெடுத்தான். அதே சமயம் பிண்டாரிகள் எனச் சொல்லப்பட்ட ஒரு முரட்டு படையினர், இன்னும் சில குதிரை வீரர்களுடன் சேர்ந்து இரகுநாத பட்டவர்த்தன் என்பவரின் தலைமையின் கீழ் சிர்ங்கேரிக்கு வந்து, அங்கு இருந்த சாரதா ஆலயம் ஆகிய கோவில்களை கொள்ளையடித்தனர். (கி. பி. 1791) அத்துடன், பிராமண அர்ச்சகர்களைக் கொன்று சென்றனர். அப்படி கொள்ளையடித்த பொருட்களின் மதிப்பு 60 இலட்ச ரூபாயாகும்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பீடாதிபதி துங்கபத்திரா நதிக்கரையில் 'உண்ணாவிரதம் மேற்கொண்டதையும் இந்த கடிதம் தெரிவிக்கிறது † இது தவிர லிகிதம் 54, 55, 56, 57, 61 களும் தெரிவிக்கின்றன.

---

† Page No. 38 - History of Sringeri
Sringeri and Mysore Sultans by A. K. Sastry

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 47

கி. பி. 1791 - 92 விரோதி கிருத் ஸம்வத்சரம்.

ஸ்ரீமத் பரமஹம்சாதி யதோக்த விருதாகிதாரண (விருதுக்கள் பலவுடைய) சிர்ங்கேரீ ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளுக்கு,

தாங்கள் அனுப்பிய எழுத்தோவியம் மூலம் விவரங்கள் அறியப்பட்டன. மராத்திய குதிரை ஆட்கள் (குதிரைப் படையினர்) வந்து சிர்ங்கேரியிலிருந்த பிராம்மணர் முதலானோரை மிகவும் அதிகமாக அடித்து துன்புறுத்தியும், கொன்ற விவரமும், ஸ்ரீ சாரதாம்பாளை அகற்றி மடத்தி லிருந்த எல்லா சொத்துக்களையும் எடுத்துக்கொண்டு போனதால் நான்கு சீடர்களுடன் கார்க்களத்திற்கு வந்து இருப்பதை அறிந்தேன்.



சாரதாம்பாள் யுகயுகமாக இருப்பவள். இப்போது இத்தெய்வத்தை மீண்டும் பிரதிஷ்டை செய்து வைத்தால் அவள் சூரிய சந்திரர் உள்ள அளவும் நிலைத்திருப்பாள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தேவையான தானியங்கள் இதர மளிகை பருப்பு வகையறா கொடுக்கும்படி ஆணையிட்டுள்ளதால் (பலருக்கு) அன்னமிட்டு, சாரதாம்பாளை செய்துவைத்து, பிரதிஷ்டையும் செய்து வைப்பது சரியே அல்லவா?

இத்தகைய பெருமை வாய்ந்த தலத்திற்கு சிரித்துக் கொண்டே துரோகம் செய்த கரங்கள் அழுதுக் கொண்டே பலனை அனுபவிக்க வேண்டிவரும். இதை சுலோகம் கூறுகிறதல்லவா? கலியுகத்தில் செய்த வினைகளுக்கு சீக்கிரத்திலேயே அதன் தீய பலனை அனுபவிக்க வேண்டி வரும். குருத் துரோகம் செய்ததற்கு பலன், வமிச நாசமே! சந்தேகமே இல்லை. இந்த விஷமக்காரர்கள் இனி படப் போகும் பாட்டை நீங்களே கண்கூடாகப் பார்க்கப் போகிறீர்கள். அவர்களுக்கு எத்தகைய மிகுந்த தாழ்நிலை வர வேண்டுமோ அப்படியே ஆசி கூறுங்கள்.

இப்போது சாரதாம்பாள் பிரதிஷ்டைக்காக 200 ரஹதிக்கு ஆன தானியங்களும், ரொக்கம் 200 ரஹதிகளும் சர்க்காரிலிருந்து கொடுக்கப்படுகிறது. தவிர, இன்னும் எந்த மளிகை சாமான்கள் வேண்டுமானாலும், அவைகளை ரொக்கம் கொடுத்து வாங்கி தரும்படி நகரா அசப்புக்கு உத்தரவு (முன்க்ஷுர் மலபூபி) கொடுக்கப்பட்டுள்ளது. தேவையான தானியங்களையும் மற்றவைகளையும் தருவித்துக் கொள்ளவும். சர்க்கார் இனாமாகக் கொடுத்த கிராமத்திலிருந்து வேண்டிய சாமக்கிரியைகளைத் தருவித்துக் கொண்டு, மக்களுக்கு உணவு படைக்கவும். சாரதாம்பாளை பிரதிஷ்டை செய்யும் போது நம்முடைய புகழ், செல்வாக்கு அதிகரிக்கும் படியும், விரோதிகள் நாசமடையவும் பிரார்த்தனை செய்யவும். எல்லோருடைய நலனுக்காகவும் தவம் செய்யவும்.

தாரிகு 5 மாஹே சமரி சால்
ஜபர்ஜித்

விரோதி கிருத் சம்வத்சரத்தின் ஆஷாட சுத்த பஞ்சமி.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 48

ஸ்ரீமத் பரமஹம்சாதி யதோக்த பிருதாங்கிதரான ஸ்ரீமத் பரம ஹம்சாதி யதோக்த சிர்ங்கேரி ஸ்ரீ சச்சிதானந்த பாரதி சுவாமி அவர்களுக்கு.

தங்கள் கடிதம் கிடைத்தது. விவரங்கள் அறியப்பட்டன. மேலும் அதிகப் படியான விவரங்களை வேலூர் வெங்கடராம ஜோயிஸ், அஹோபல சாஸ்திரிகளும் நேரிற் கொண்டு வந்த கடிதம் மூலமும் அறியப்பட்டன.

தங்கள் சவாரிக்காக ஒரு பல்லக்கும், அதற்குத் தேவையான சாமகிரியைகளையும் கொடுக்கும்படி நகரர்வின் அசப்புக்கு (மன்சூர் மல்பூபி) ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஆணையை அசப்பிடம் அனுப்பி சவாரிக்கான பல்லக்கை தருவித்து கொள்ளவும். முன் அசப்பிற்கு எழுதியபடி, தானியத்தையும் ரொக்கத்தையும் தருவித்துக் கொண்டு சாரதாம்பாளின் பிரதிஷ்டையை செய்து வைப்பதுடன், சர்க்காரின் செல்வாக்கு, புகழ் மென்மேலும் ஓங்கவும், பகைவர் நாசமாவதற்கும் தாங்கள் பிரார்த்தித்து கொண்டு தவம் செய்ய வேண்டுவதுடன் ஆசிகளையும் விழைகிறேன்.

தாரிக் 16 மாஹே சமர்சால்
ஜபர்ஜித்
விரோதி க்ருத் சம்வத்சர ஆஷாடபகுளா - 3

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 49

அடுத்துவரும் கடிதங்கள் இந்நிகழ்ச்சியைப் பற்றி கூறி சாரதாம்பாள் பிரதிஷ்டைக்காக திப்பு சுல்தான் அனுப்பிய பல பொருட்கள், பற்பல நாணயங்கள், ஜகத் குருக்கு அனுப்பிய சால்வைகள், யானைகள் ஆகியவைப் பற்றிய விவரங்களைக் கூறி, நம்மை யெல்லாம் அவர் தெய்வ பக்தியைக் கண்டு மனதார போற்றச் செய்கின்றன.

கடிதம் 49

1791 - 92

(முன் கடிதங்களில் ஆரம்பித்தது போலவே இதுவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.)

திப்பு சுல்தான் பாதுஷாவின் சலாம்.

பகைவர் சமீபத்தில் செய்த துரோகச் செயல்களுக்கும், ஆண், பெண், பிராமணர்களுக்குச் செய்த தொல்லைகள் தங்களை எவ்வளவு பாதித்துள்ளது என்பதை அறிய முடிந்தது. அவர்கள் தீயச் செயல்கள் அவர்களுக்கு வினையாக முடியும்படியாக அவர்கள் தங்கள் சாபத்தை ஏற்கும்படி செய்தது. இவ்விவரங்களை, தங்கள் முந்திய கடிதம் மூலம் அறிந்தேன். இப்போது நரசிம்ம சாஸ்திரியிடம் அனுப்பிய லிகிதம் மூலம் மற்ற விவரங்களையும் அறியலானேன். துரோகம் செய்தவர்களுக்கு ஈசனுடைய கடாக்ஷமிருந்தாலும் மிகுந்த ஈன நிலையையே அடைவர். உலகின் நலனைப் பற்றி யோசிக்கும் தாங்கள் பெரும் தவமுனிவர்.

அரசத் துரோகம் பண்ணினவர்களுக்கு நாசம் ஏற்படும்படி ஈசனை தியானிக்கவும். ஈசனின் அருளாலும், தங்கள் ஆசீர்வாதத்தினாலும் நாட்டில் சீக்கிரமே

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தொல்லைகள் நீங்கி, நன்மை ஏற்படும். இது சம்பந்தமாக இன்னும் சில விவரங்களுக்கும் நரசிம்ம சாஸ்திரிக்கு நேரில் உத்தரவு கொடுக்கப்பட்டு இருக்கிறது. அத்துடன் வேலூர் வெங்கடரமண ஜோயிஸ் எழுதி அனுப்பியுள்ளதில் (கடிதத்தில்) இன்னும் விவரங்கள் தெரியவரும். உங்கள் மடத்தின் யானை, பல்லக்கு ஆகியவற்றைக் கூட கவர்ந்து சென்ற விவரம் தெரிந்தது. எனவே அரசு அகமதின் சார்பில் யானை ஒன்று அனுப்பி கொடுக்கப்பட்டிருக்கிறது.

சாரதாம்பாள் பிரதிஷ்டைக்காக ஏற்கெனவே அசப்பிற்கு 200 ரஹதி நெல்லும், 200 ரஹதி கூடுதலாகக் கொடுக்கும்படி ஆணையிடப்பட்டது. அதன்படி அவைகளை பெற்றுக் கொண்டு, தேவதையை பிரதிஷ்டை செய்து வைத்து, விவரத்தை தெரிவிக்கவும்.

நாட்டின் அமைதிக்காகவும், கஜானா செழிக்கவும், நம் ஆசைகள் எல்லாம் நிறைவேறும்படியும் ஈசனை ஒரே நோக்குடன் தியானம் செய்யும்போது, ஆசிர்வதிக்கவும்.

சாரதாம்பாளுக்கு உடுத்துவதற்காக சிறந்த புடவை யொன்றும், இரவிக்கை யொன்றும், தங்களுக்கு சால்வை ஜோடி ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளன. சேர்ந்த விவரத்தை தெரிவிக்கவும்.

மடத்தின் விவகாரங்கள் எவ்வித தடங்கலுமின்றி சுமுகமாக நடத்தி வரும்படி நகரா அசப்புக்கு ஆணை யிடப்பட்டுள்ளது. அவனிடம் அனுப்பவும்.

26 மாஹே - சமரிசால்
ஜபர் ஜத் - சன் 1219 மகமத்
விரோதி க்ருத் - சம்வத்சர ஆஷாட பகுளா 12.

* * *

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 50

விரோதி க்ருத் கி. பி. 1791 - '92.

சச்சிதானந்த பாரதி சுவாமிகள் அனுப்பிய லிகிதத்தில் இருந்து எல்லா விவரங்களும் அறியப்படலாயின. சாரதாம்பாள் பிரதிஷ்டைக்காக நகரா அசப்பிடம் நெல், ரொக்கம் 400 ரஹதி, பல்லக்கு ஆகியவைகளை கொடுக்கும்படி பிறப்பித்த ஆணை அறிந்திருப்பீர்கள். அதேபோல் சாரதாம்பாளின் பிரதிஷ்டை பற்றி எழுதியதும் சரிதானே. நல்ல பலமான பல்லக்கு அனுப்பும்படி மீண்டும் பிரத்தியேக ஆணையிடப்பட்டுள்ளது. பல்லக்கை தருவித்துக் கொள்ளவும்.

விரைவிலேயே சாரதாம்பாள் பிரதிஷ்டை, சம்ப்ரோக்ஷணம் ஆகியவற்றை செய்து முடிக்கவும்.

இப்போது மடத்துக்காக சல்லகேசா என்ற யானையை கோபால ஜோயிஸ், ஹரேகேரே நாராயணாவுடன் அனுப்பியுள்ளார். வந்து சேர்ந்தமைக்கு விவரம் தெரிவிக்கச் செய்யவும்.

இதுவும் அன்றி, சர்க்காரில் புதிதாக தயார் செய்த நாணயங்கள் ஆன :-

ஹைதர் மகரி	50-க்கு	—	100 ரூ.
அபிதி	100-க்கு	—	50 ரூ.
பாகபி	200-க்கு	—	500 ரூ.
பகே நாலுக்கு		—	700 ரூ.
பொதை கினஸி அகமதி	5-க்கு	—	80 ரூ.
சிகேரே	10-க்கு	—	80 ரூ.
பாமரே	10-க்கு	—	40 ரூ.
கூட பகே	3-க்கு	—	200 ரூ. +

* திப்புவின் பல்வேறு நாணயங்கள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கூட 500 ரூபாய், இங்கு கஜானாவில் வேலை செய்யும் கொல்லா மூலம் அனுப்பப்பட்டுள்ளது. வந்து சேர்ந்தமைக்கு எழுத்து மூலம் தெரிவிக்கவும்.

மேற்கொண்டு எல்லா விவரங்களுக்கும் கோபால ஜோயிஸ் மூலம் ஆணை அனுப்பப்பட்டுள்ளது. நாட்டைப் பிடித்திருக்கும் தொல்லைகள் நீங்கவும், மக்கள் சௌக்கிய மாக இருக்கவும், குருத்துரோகம் ஆகிய துரோகங்கள் செய்வோர் அழியும்படியும் பிரார்த்தனை செய்துகொண்டு ஈசனை இடையறாது, மனத்தினை ஒருமுகமாக்கிக் கொண்டு ஜபம் செய்ய வேண்டுகிறேன்.

25, மாஹே - ஜாபரி சால்
ஜாபர் ஜத் - சன் 12=19 மகமத்
விரோதி க்ருத் சம்வத்சர ச்ராவண பகுளா 10

குறிப்பு :

கி. பி. 1791-ம் ஆண்டிலே எழுதிய மற்றுமொரு கடிதத்தில் - சிர்ங்கேரி ஜகத்குரு சஹஸ்ரசண்டி ஜபம் ஹோமம் செய்யுமாறு வேண்டினார். எதற்காக? பகைவர் படைகள் ஒரேயடியாக அழியக் கோரி இந்த ஜபத்தைச் செய்ய வேண்டி சிர்ங்கேரி பீடாதிபதி ஸ்ரீ ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளை வேண்டினார். இந்த ஜபத்தின்போது ஒவ்வொரு நாளும் 1000 பிராம்மணர்கள் வீதம் 40 நாட்கள் அல்லது ஒரு மண்டலத்திற்கு உணவளிக்கவும், ஜபத்தின் மற்ற செலவுகளையும் திப்பு சுல்தானே ஏற்றார்.

இவரன்றோ தெய்வத் திருமகன் !

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 51

கி. பி. 1791 - 92

தாங்கள் அனுப்பிய 2 லிகிதங்கள் மூலம் விவரங்கள் தெரியலாயின.

'சஹஸ்ர சண்டி.' ஜபம் செய்வதற்குத் தேவையான சாமான்களின் பட்டியலும் வந்து சேர்ந்தன. இராச்சியத்தின் பிரச்னைகள், சிக்கல்கள் தீர்ந்து குடிமக்கள் சுகமாக இருக்கவும், அரசின் செல்வாக்கும் புகழும் அதிகரிக்கவும், சாதுர்மாசம் செய்ய வேண்டுமென்றும், சஹஸ்ரசண்டி ஜபம் செய்து முடிக்கவேண்டும் என்று எழுதியுள்ளதைப் பார்த்து மகிழ்வுற்றேன்.

ஜபம் செய்வதற்கு வேண்டிய சாமான்கள் எல்லா வற்றையும் வரவழைத்துக் கொடுக்கும்படி ஆணை பிறப்பித்து, நானே கையெழுத்திட்டு முத்திரையும் போட்டு அசப்பிடம் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்துள்ளேன். உத்தர வின் பிரகாரம் சாமக்கிரியைகள் எல்லாவற்றையும் அனுப்பும் படி தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி நகரா அசப்பின் அலுவலகத் தலைவர் திரியம்பக ராவ், கொப்பா ஹோபலி (தாலுக்காவின் ஒரு பகுதி) அமல்தாரர் என இருவர் சிர்ங்கேரி வந்து சாமக்கிரியை எல்லாவற்றையும் வரவழைத்து வைத்து, ஜபத்திற்கு வேண்டியவற்றை செய்து உதவ நகரா அசப் அனுப்பிருக்கிறார்.

இது பற்றி ஹுஜூரிலிருந்தும் கொப்பா, ஹோபளி அமல்தாரர்களுக்கு தாக்கீது அனுப்பியுள்ளபடி, ஜபத்திற்குத் தேவையான கலசம், வஸ்திரங்கள், பிரதிமை முதலியவைகளைப் பெறவும், தகுதியுள்ள பிராம்மணரை நியமித்து, முறைப்படி ஜபத்தை செய்து வைத்து அவர்களுக்குத் தக்ஷிணை முதலியவற்றை கொடுப்பதுடனன்றி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தினமும் 1000 பிராமணர்களுக்கு உணவளித்து, அரசின் புகழ் ஓங்குவதற்கும், பகைவர்கள் அழியவும், குடிமக்கள் சுகமாக இருப்பதற்காகவும் ஜபத்தை செய்யும்படி பண்ணவும்.

இதைப் பற்றிய எல்லா உத்தரவும் எழுத்து மூலம் கொடுத்திருப்பதை கவனித்துப் பார்த்து உத்தரவின்படி சாமான்களை தருவித்து கொண்டு ஜபத்தை செய்ய வைக்கவும்.

பாளம்பட்டனுக்கு அனுப்பிய ஸ்ரீமுகம் வந்து சேர்ந்தது. மடத்தின் தாலுக்குடைய நாரணய்யா. மல்லய்யாவை † நகரத்தின் பவுஜ்தார் அழைத்துக்கொண்டு போயிருக்கிறானாம். அவர்களை விடுதலை செய்யும்படி மேற்கோண்டு மடம் விஷயத்தில் விஷமம் செய்யாதவாறு மகமத்ரஜா பவுஜ்தாருக்கு நகரத்தின் சதூரனுக்கும் ஆணை அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஆணையை அவருக்கு அனுப்பி மடத்தை சேர்ந்த இவ்விருவரையும் வரவழைத்து கொள்ளவும்.

மேலே எழுதினபடி ஜபத்தை செவ்வனே, நாட்டின் செல்வாக்கு, புகழ் ஓங்கவும், பகை நாசம் அடையவும், பிரஜைகள் எல்லா நலன்களையும் பெற்றிருக்கவும், ஈசனை பிரார்த்தித்துக் கொண்டு, செய்து முடித்து, எப்போதும் ஆசிர்வாதம் செய்வது போல் ஆசி வழங்கவும்.

ஜபம் முடிகிறவரையில் கோபால ஜோயிஸ் அங்கே உதவி பண்ணும்படி உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது.

எழுதின பிரகாரம் பண்ணி வைப்பது.

மாஹே சமரி சால்
ஜபரிஜித் 1219
விரோதி கிருத் - சம்வத்சர - ஆஸ்விகா சுத்த - 10.

---

† சிரிங்கேரி மடத்திற்கு பலவித தொல்லைகள் கொடுத்து, எதிராக கூச்சி செய்தவர்கள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 52

விரோதி கிருத் - 1791 - 92

தங்கள் கடிதம் மூலம் எல்லா விவரங்களும் அறியப்பட்டன.

சஹஸ்ரசண்டி ஜபத்தை ஆஸ்விக பகுள - 12ம் நாள் ஆரம்பிப்பதாக எழுதியிருப்பது சரியே. நல்லதாயிற்று. ஈசன் அருளாலும் தங்கள் ஆசீர்வாதத்தினாலும் நன்மையே வரும். ஜபத்தை நல்லவிதமாக முறைப்படி நடத்தி வைக்கவும். நரசிம்ம சாஸ்திரியிடம் இருந்து வந்த சில முக்கியமான கடிதங்கள் நிமித்தமாக பிராமணன் வந்திருப்பதால், சீக்கிரமாக அக்கடிதங்களை அனுப்ப வேண்டும். வெங்கடராம ஜோயிஸன் சில விவரங்களுக்கு நாகரி கடித நகல் ஒன்றும் கூட அனுப்பியிருப்பதால் அதன்படி 4 கடிதங்களை எழுத வைத்து அனுப்பும்படி செய்வது.

11 மாஹே - தீனி சால்
ஜபரிஜித் - 1219
விரோதி கிருத் - சம்வத்சர - கார்த்திக சுக்ல - 11



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 53

விரோதி கிருத் - கி. பி. 1791 - 92.

அனுப்பப்பட்ட இரண்டு லிகிதங்களின் மூலம் எல்லா விவரங்களும் அறியப்பட்டன.

சகஸ்ர சண்டி ஜபத்தை ஆஸ்வீக பகுளம் 12ம் நாள் செய்து வைப்பதாக அறிந்தேன். இந்த ஜபம் எவ்வித தடையும் இன்றி நடக்கவும், விஷமக்காரர்கள் எ வ் வி த தொந்தரவும் கொடுக்காதபடியும், பாதுகாப்பு கொடுப்பதற்கு மகமது ரஜாவுக்கு ஆணை இ ட் டி ரு க் க ப் ப டு கி ற தா க எழுதியிருப்பது சரியே. அவ்வாறே ஜபத்தை நிர்விக்னமாக நடத்தி வைக்கவும் மகமது ரஜா வேண்டிய பந்தோபஸ்து செய்வான். த ற் போ து வெங்கடரமண ஜோயிஸ் எல்லா விவரங்களையும் எழுதியிருப்பதால் ஆவன செய்யும்படி செய்யவும்.

தாரிக் 4 மாஹே தீனி சால்
ஜபர்ஜித் சன் சாவ்ரின் 19
விரோதி சம்வத்சர - கார்த்திக பகுளா-4



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 54

விரோதி கிருத் - கி. பி. 1791 - 1792

தங்களின் இரு லிகிதங்கள் மூலம் எல்லா விவரங்களும் தெரியலாயிற்று.

பரசுராம கணேச பந்துக்கு எழுதிய ஆணை இரண்டு அனுப்பியதாக அறிந்தேன்.

அரசாங்கத்திற்கு தினமும் ஒவ்வொரு திக்கிலும் வெற்றி ஏற்படும்படி மேற்கொண்டுள்ள தவம் பற்றிய விவரமும் அறிந்தேன்.

இரண்டு ஆணைகளை நரசிம்ம சாஸ்திரி மூலம் அனுப்பி மடத்திலிருந்து 60 இலட்ச ரூபாய் கொள்ளையடித்து போயுள்ளவர்களுக்கு அனுப்பியுள்ளீர்கள். இந்த ஆணைகளை பரசுராமனுக்கும் காட்டி பொருள்களை திருப்பிக் கொடுக்கும் படி சொல்வோம். பொருள்களை திருப்பிக் கொடுத்தால் சரி, இல்லையென்றால் ஆணையை திருப்பி எடுத்து வந்து விடுவது சரி.

அரசுக்கு தினமும் வெற்றி கிடைக்கும்படியும், குருத் துரோகம் முதலான துரோகங்களில் ஈடுபடுவோர் விரைவில் நாசமடையும்படியும், மூன்று காலமும் ஆசீர்வாதம் செய்யவும்.

சஹஸ்ர சண்டி ஜபத்தை மண்டலம் முடிய சாத்திரத்தில் சொல்லப்பட்டபடி செய்விப்பது; ஜபம் முடிவடைவதற்குள் உங்களது ஆசிர்வாதத்தின் மகிமையால் எல்லாம் நல்லபடியே நடக்கலாம். நகரத்திலிருந்து தங்கள் சவாரிக்கு செய்யப்பட்ட பல்லக்கு இப்போது ஹுஜூரினால் அனுப்பப்பட்டுள்ளது. ஆசாரியாளின் உள்ளக்கிடக்கையை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தெரிவிக்க வேண்டுகிறேன். தங்கள் நலம், மகிழ்ச்சி பற்றி அவ்வப்போது தகவல் எழுதி அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

மேற்கண்ட விவரங்களை வெங்கடராம ஜோயிஸா எழுதி வைத்து அனுப்பியுள்ளதால் அறியலாம்.

29 மாஹே தீனி சால்
ஜபர்ஜத் சன் 1219 மகமத்
விரோதி கிருத் சம்வத்சர கார்த்திக பகுளா-11



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 55

விரோதிகிருத் – 1791 - 92

பிராமணனிடம் அனுப்பிய லிகிதத்தின் மூலம் எல்லா விவரங்களும் அறியப்பட்டன.

சஹஸ்ர சண்டி ஜபம் விமரிசையாக நடக்கிறது என்றும் பழம், பிரசாதம், மந்திராக்ஷதை முதலியவற்றை அனுப்பி உள்ளதாக தெரிவிக்கிறீர்கள். அத்துடன் மடத்திலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை திருப்பி கொடுக்குமாறு பரசுராமனுக்கும் ரகுநாதராவுக்கும் கொடுத்த ஆணைகளையும், சூறையாடப்பட்ட பொருள்களின் பட்டியல் கொத்துக்காரரிடம் அனுப்பவேண்டும் போன்ற விவரங்களை எழுதியிருப்பது சரியே.

பழம், பிரசாதம், மந்திராக்ஷதை யாவும் வந்து சேர்ந்தன. பரசுராமனுக்கும், ரகுநாதராவுக்கும் வந்த கட்டளைகளும் அனுப்பப்பட்டுள்ளன. முன் எழுதியது போல் பட்டியல் எழுதி நரசிம்மசாஸ்திரிகளிடம் அனுப்ப வேண்டுமா? இல்லை, வேறு யாராவது கொத்துக்காரனை அனுப்ப வேண்டுமா என பார்த்து, அனுப்பி பணத்தை வரவழைப்பது உசிதம். குருத் துரோகம் செய்தவருக்கு எத்தண்டனை கிடைக்குமோ அது நிச்சயம் கிடைக்கும்.

இப்போது நீங்கள் சமுத்திர ஸ்நானம் செய்வதற்கு ஜமாலாபாத் அசப்புக்கு உத்தரவு கொடுக்க வேண்டும் என்று வெங்கடராம் ஜோயிஸ் சொன்னதால், தேவையான அனுமதி அனுப்பப்பட்டுள்ளது. அதனை கூட எடுத்துக் கொண்டு வருமபடி செய்யவும்.

உங்களுக்காக சாமரம் ஒரு ஜதை அனுப்பப்படுகிறது கிடைத்த விவரத்தை தெரிவித்தால் நலம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

26 மாஹே சத்ரிசால்
ஜபர்ஜத்-சன் சங்வின் 19 மகமத்

விரோதி சம்வத்சர மார்க்கசிர பகுளா - 11ம்

முக்கிய குறிப்பு : சவாய் மாதவராவ் பரசுராமனுக்கு எழுதிய கடிதம் வந்தது. இங்கே வைத்துக் கொள்ளப்பட்டது தவிர நான்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அவரவர்களுக்கு அவைகளை அனுப்பச் செய்யவும்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 56

விரோதி க்ருத் - 1791 - 92

உங்களைச் சேர்ந்த நரசிம்ம சாஸ்திரி பரசுராமனுடைய சைன்யத்தை சந்திக்கப்போயிருப்பது, சரியே. இதற்கு இடையே பரசுராமன் பரந்தாமன் அடி அடைந்ததாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த செய்தியை நம்புவதா? என்னவென புரியவில்லை.

நரசிம்ம சாஸ்திரிகளின் மூலம் விவரங்களை எழுதி யனுப்பச் செய்யவும். நீங்கள் பெரிய தவமுனிவர். வந்திருக்கக் கூடிய மூன்று சத்ருக்களும்+ வீழவும், அரசாங்கம் எல்லா நலன்களை பெறவும் மூன்று காலமும் ஈசுவர பிரார்த்தனை செய்துக் கொண்டு சர்க்கார் க்ஷேமம் ஆகும்படியும் ஆசீர்வாதம் செய்யுமாறு செய்வது

27 மாஹே இராஹிமணி சால்
ஜபநிஜத் சன் சாவரின் 1219 மகமத்

விரோதி கிருத் – சம்வத்சர - புஷ்ய பகுள திரயோதசி,



Sri Vidyabharathi Book Centre, Sringeri

+ ஆங்கிலேயர், நைஜாம், மராத்தியர்

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 57

விரோதி கிருத் - 1791 - 92

தாங்கள் அனுப்பிய கடிதத்தினால் சகல விவரங்களும் அறியப்பட்டன. சில கடிதங்கள் நிமித்தம் நரசிம்ம சாஸ்திரி இங்கு வந்து விட்டு மீண்டும் சேனைக்கு (அதாவது பரசுராம பாஹூவிடம்) போன விவரம் தெரியலாயிற்று. மற்ற இடங்களில் குற்றங்கள் (தோஷங்கள்) செய்தவர்களுக்கு தள்ளிவைப்பது அல்லது நீக்குவது (பகிஷ்காரம்) தண்டனை பற்றிய விவரங்களை எழுதியுள்ளீர்கள். நல்லதாயிற்று. அவர்களுக்கு குருவாகவே இருக்கிறீர்கள். இவைகளுக்கு எவ்வாறு செய்யவேண்டுமோ அவ்வாறே செய்தல் சரி.

ரகுநாத ராயனுக்கு பூனாவிலிருந்து வந்த கடிதம், பரசுராமன் மடத்திற்கு எழுதிய கடிதம் ஆகியனவும் வந்து சேர்ந்தன. இங்கே வைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

தாங்கள் மிகப் பெரியவர். முக்காலமும் நன்றாக ஆசீர்வாதம் செய்து வரவும். நரசிம்ம சாஸ்திரி வந்தவுடன் தகவலை எழுதி அனுப்பிவைக்கவும். அங்கிருந்து வந்தவுடன் நரசிம்ம பட்டனை சாஸ்திரியிடம் அனுப்பி வைக்கவும். இப்பொழுது வந்தவர் கொடுக்கும் தகவல் மூலம் எல்லாம் புரிய வரும்.

30 மாஹே ரஹூமானி சால்
ஜபர்ஜத் சன் 1219 மகமத்
விரோதி க்ருத் - புஷ்ய பகுள 30ல்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

58ம் கடிதம் பற்றிய குறிப்பு :

திப்பு சுல்தானுக்கு சிர்ங்கேரி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளிடம் பெரு மதிப்பும் மரியாதையும் இருந்தன. இதை எடுத்துக் காட்டுகிறது பின்வரும் கடிதம். அரசாங்கத்தில் பணிபுரியும் பிராமணர்கள் தங்கம் களவாடினாலோ, இல்லை மது அருந்தினாலோ, அக்குற்றங்களை சாஸ்திர ரீதியாக தண்டனை கொடுக்க, பீடாதிபதிக்கு தனியொரு உரிமை கொடுத்தாரென்றால், அது அவர் சிர்ங்கேரி பீடத்தின்பால் கொண்டிருந்த பெரும் நம்பிக்கையையே குறிக்கும் அல்லவா?

அத்துடனன்றி, திப்புவின் அரசில் பணியாற்றிய பிராமண மக்களின் எண்ணிக்கை நாற்பத்தைந்தாயிரத்திலிருந்து ஐம்பதினாயிரம் வரை ஆகும். இத்தகைய குற்றங்களுக்கு தண்டனைக் கொடுக்கும் உரிமை அரசிடமே இருந்தது. இப்பெரும் அதிகாரத்தை, ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ சச்சிதானந்த பாரதி சுவாமிகளுக்கு மனமுவந்து கொடுத்தார் என்றால், அந்த பரந்த உள்ளத்தைப் போற்றாமல், தூற்றியவர்களை தூற்றாமலிருக்க முடியுமா?

கடிதம் 58

விரோதி க்ருத் - கி. பி. 1791-92

தாங்கள் அனுப்பிய மூன்று கடிதங்கள் மூலமும் நரசிம்ம சாஸ்திரியிடமிருந்து அறிந்தவைகள் மூலமும் எல்லா விவரங்களும் தெரியவந்தன. தாங்கள் அனுப்பிய இரு ஸ்ரீ முகங்களின்படி நரசிம்ம சாஸ்திரியிடம் அனுப்பப்பட்டது.

அரசுக்கும், குடிமக்களுக்கும் இராஜ்யத்திற்கும் க்ஷேமம் ஆகும்படி மூன்று காலமும் ஈசுவர பிரார்த்தனை தொடர்ந்து செய்துவர வேண்டப்படுகிறது. சஹஸ்ர சண்டி ஜபம் சத்ரு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பலாயன ஜபமும் சேர்த்து பண்ணிவைப்பது சரியே. பகைவர்கள் நாசமாகி அரசுக்கும், இராஜ்யத்திற்கும் நலமுண்டாக தங்களின் இடைவிடா ஜபம் மிகவும் தேவை.

மற்ற விவரங்கள் நரசிம்ம சாஸ்திரி வெங்கடராம ஜோயிஸரும் எழுதி அனுப்புவார்கள். மடத்தைச் சேர்ந்த இரு பிராமணர்களை விடுதலை செய்யும்படி ஆணை அனுப்பப்பட்டுள்ளது. தாங்களும் ஆணை அனுப்பி வரவழைக்கும்படி செய்யவும்.

24 மாஹே குசாத் சால்
ஜபர்ஜத் சன் சாவரின் 1219 மகமத்

நம் அரசில் 45 அல்லது 50 ஆயிரத்திற்கும் மேல் பிராமணர் அரசாங்க பணியில் இருப்பதால், அவர்களில் திருட்டு, கள் குடித்தல்; பிரம்மஹத்தி முதலிய பாபங்களில் ஈடுபடுபவர்களை விசாரித்து, தண்டனை வழங்கும் உரிமை அரசுக்கு மட்டுமே தேவையா? உங்கள் மடத்தில் இத்தகைய குற்றங்கள் நடந்தால், தாங்களே அவர்களுக்கு சாஸ்திர பிரகாரம் எந்த தண்டனை வேண்டுமானாலும் விதிக்கலாம்.

இதற்கென ஒரு புத்திசாலியை முத்திராதிகாரியாக நியமித்து சிக்ஷை பண்ணி வைக்கும்படி செய்யவும்.

பிற்சேர்க்கை :

தாங்கள் சவாரி செய்வதற்கு தோஷமற்ற உத்தமமான வெள்ளைக் குதிரை ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. குதிரை வந்த விவரத்திற்கு தகவல் அனுப்பவும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 59

முன்பு ஸ்ரீ சாரதாம்பாளின் உற்சவத்திற்காக பல்லக்கு அனுப்பியது சரிதானே? இப்பொழுது தாங்கள் சவாரி செய்யக்கூடிய வெள்ளி கூப்பே 8 ஹஜ்ஜே இருக்கக்கூடிய பல்லக்கு ஒன்றும், அதன் உபகரணங்களும் அனுப்பப் படுகின்றன. இது தவிர ஜரிகையுள்ள பாடோபவும் அனுப்பப் பட்டிருக்கிறது. சோப்தால் பக்கீர் மகமதிடம் கொடுத்து அனுப்பப்பட்ட இந்த உத்தமமான பல்லக்கை, தாங்கள் சவாரி செய்ய வைத்துக் கொள்ளவேண்டும்.

அரசு மென்மேலும் முன்னேறும்படியும், பகைவர்கள் நாசமாகும் படியும் ஈசுவர பிராத்தனை செய்து வரவும்.

ஜபம் பூர்த்தியானதும் கோபால ஜோயிஸை ஹுஜூருக்கு அனுப்பி வைக்கும்படி செய்யவும்

29 மாஹே அனீசால்

ஜபர்ஜத் சன் 1219 மகமத்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 60

விரோதி கிருத் - கி. பி. 1791-92

தாங்கள் அனுப்பிய கடிதத்திலிருந்து எல்லா விவரங்களும் அறியப்பட்டன. இது தவிர, இராமா பட்டனின் வாயிலாக சொல்லியனுப்பிய மற்ற விவரங்களையும் அறியலானோம். தாங்கள் பெரியவர்கள். எப்பவும் இதே போல் ஆசீர்வாதம் பண்ணிக் கொண்டு வரவும். வெங்கடராம ஜோயிஸின் கடிதமும் பல விஷயங்களைத் தெரிவிக்கின்றன.

இப்பொழுது தங்களுக்காக சாமரம் அனுப்பியுள்ளேன். சாமரம் வந்து சேர்ந்தமைக்கு அறிவிக்கவும். இந்த சாமரத்திற்கு அதிக வேலைப்பாடுடைய வெள்ளிப்பிடி போட்டிருப்பதால், நன்ருக சரிபார்த்து எடுத்துக்கொள்ளும்படி செய்யவும்.

18 மாஹே ரக்கானிசால்

ஜபர்ஜத் சன் 1219 மகமத்

விரோதி கிருத்-சம்வத்சர-பால்குண பகுளா-3.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 61

பரிதாவி கிருத் - கி. பி. 1792-93

தாங்கள் இராமபட்டா, ஹரேக்கேரே வெங்கடேசனுடன் எழுதி அனுப்பிய கடிதத்தின் மூலம் எல்லா விவரங்களும் அறியலானோம். மடத்தின் பொருள் போன விஷயத்தில் பரசுராமனிடம் பிராம்மணனை அனுப்பியும் எவ்வித முன்னேற்றமும் இல்லை என்பதால் தாங்களே பூனா வரைக்கும் போவதாக தீர்மானித்திருக்கும் விவரமும் அறிந்தோம். இது சரியே. போகும்போது வழியில் இங்கு வந்து எங்களுக்கும் தரிசனம் கொடுத்து நஞ்சன்கூடு முதலிய கோயில் தரிசனத்தையும் பண்ணிக்கொண்டு போகலாம் அல்லவா? அவசியம் இங்குவரை தயவுசெய்து புறப்பட்டு வரவேண்டும். தாங்கள் இங்கு புறப்பட்டு வரும்போது, தேவையான சாமான்கள், ஒட்டகம் இரண்டு, வழியில் தங்குமிடங்கள், புல், விறகு ஆகிய எல்லாவற்றையும் கொடுக்கும்படி நகராவுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டிருக் கிறது. தங்களுக்குக் காவலுக்காக இரண்டு ஹரிக்காரர் களையும் நியமித்து உத்தரவு பிறப்பித்துள்ளதால், வழியில் எல்லா உத்தரவுகளையுங் காட்டி, எல்லா ஏற்பாடுகளையும் பண்ணிக்கொண்டு புறப்பட்டு வர செய்வது. மேலும் சில விவரங்களெல்லாம் நரசிம்ம சாஸ்திரி மூலமும் அறியப் பட்டது. [x]

27 மாஹே-அகமத் சால்

சஹாரா (ஆண்டு) சன் 1220 மகமத்

பரிதாவீ சம்வத்சரம் சைத்ர பகுள-122

---

x ஜகத்குருவுக்கு உதவி செய்ததுடனன்றி, அவரை தரிசனம் செய்ய அழைத்த திப்பு-ஒரு மத வெறியரா?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

[ஜகத்குரு அவர்கள் திப்பு சுல்தானின் விருப்பப்படியே அவர் இராச்சியத்திலிருந்த நஞ்சன் கூடு, ஸ்ரீரங்கப்பட்டினம் ஆகிய இடங்களுக்குச் சென்றார். திப்பு சுல்தான் அவரை வரவேற்று, உபசாரங்களனைத்தையும் குறைவின்றி செய்தார். பின்னர் அங்கிருந்து விட்டு சிர்ங்கேரி பீடாதிபதி ஸ்ரீ ஸ்ரீ சச்சிதானந்த பாரதி சுவாமிகள் புறப்பட்டு சென்றார். நீண்ட காலமாகியும் எவ்வித தகவலும் கிடைக்காததால், திப்பு சுல்தான் ஜகத்குருவுக்கு எழுதிய இக்கடிதம், திப்புவின் ஆழ்ந்த பக்தியையும், மிகுந்த மரியாதையையும் ஜகத் குருவிடம் கொண்ட அக்கறையையும் எடுத்துக்காட்டுகிறது. பரிதாவீ சம்வத்சார- கி. பி. 1792-93

கடிதம் 62

தாங்கள் இங்கிருந்து போய் வெகு நாட்களாகியும் இதுவரை எந்த இடத்தையும் சேர்ந்த தகவலே இல்லை. ஆதலால் உடனே தகவலை அனுப்பச் செய்யவும். இப்போது எங்கே இருக்கிறீர்கள்? இவ்விவரத்தினை சீக்கிரமே தெரிவிக்கச் செய்வது. வழியில் எங்கும் தாமதித்து நிற்காமல் முன்னேறிக் கொண்டுச் செல்வது நல்லது.

24 மாஹெ - ஹ்த் சால்

ஜஸஹர், சன் 1220 மகமத்

பரிதாவீ சம்வத்சர-கார்த்திக பகுளா-9

* * *

இக்கடிதத்தில் ஜகத்குருவின் லிகிதம் கிடைத்த திப்புவின் மகிழ்ச்சியில் பங்குக் கொள்கிறோம். அத்துடனா?

சுவாமிகள் எங்கிருந்தாலும் நிறைய மழையும், நல்ல மகசூலும் கிடைக்கும் என்ற அவரது நம்பிக்கைத்தான் எவ்வளவு வேறான்றியிருக்கிறது! அதே நேரத்தில், ஜகத் குரு அவர்கள் சீக்கிரமே, பூனாவிலிருந்து தன் நாட்டிற்கு வரவேண்டும் என்ற அவாவினைக் கண்டு வியக்கிறோம் அல்லவா?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 63

தாங்கள் எழுதி அனுப்பிய கடிதத்தின் வாயிலாக எல்லா விவரங்களும் தெரியலாயின. தாங்கள் மதிப்பிற்குரிய ஜகத்குரு அவர்கள். உலகெல்லாம் நலமுடன் இருக்கவும், குடிமக்கள் சௌக்கியமாக இருக்க வேண்டும் என்றும் இடைவிடா தவம் செய்பவர்கள். மேலும் அரசு மென்மேலும் அபிவிருத்தியாகும்படி மூன்று காலமும் தவம் புரிந்து ஈசுவர பிரார்த்தனையைத் தொடர்ந்து செய்யவும். தங்களைப் போன்ற பெரியவர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் அந்த நாட்டில் நல்ல மழையும், அதிக விளைச்சல் ஆகிய எல்லா நலன்களும் ஏற்பட்டு, சுபிட்சமாகி விடுகிறது. அங்ஙனமிருக்க தாங்கள் அதிக நாட்கள் இன்னொரு நாட்டில் (பரஸ்தலத்தில்) ஏன் தங்கவேண்டும்? போன வேலையை சீக்கிரமாக நல்லபடியாக முடித்துக் கொண்டு, நம் நாட்டிற்குப் புறப்பட்டு வர பிராத்திக்கிறேன்.

29 மாஹே, பாஜசால் சகர்
சன் 1220 மகமத்
பரிதாவீ சம்வத்சரம் மாக பகுளா - 14

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஒன்றே குலம்
ஒருவனே தேவன்



ஸ்ரீரங்க பட்டினத்திலுள்ள ரங்கநாதர் ஆலயமும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

எங்கு தொழுதாலும்
இறைவன் ஒருவனே



பக்கத்திலே - அதே கோட்டையில் கம்பீரமாக காட்சியளிக்கும் மஜீத்-ஏ-அல்லாவும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டன்றோ ?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 64

இக்கடிதத்தில் அனுப்பப்பட்ட வெகுமதிகள் விவரமும், ஜகற்குரு அவர்கள் மீண்டும் மைசூர் வருவதைப் பற்றிய திப்புவின் உவகையையும் காணலாம்.

* * *

பிரமாதிச்ச சம்வத்சர-1793-1794

அனுப்பிய கடிதத்தின் வாயிலாக எல்லா விவரமும் அறியலானோம்.

1) பச்சைக் கல் பதித்த தலைச்சாமான் (சிருபேஷ் (1)
2) கெம்புகல் பதித்த கலகி ஒன்று
3) சால்வை ஜோடி ஒன்றும்
4) ஸ்ரீ மந்தரின் ° பணப்பை ஒன்று
5) மதாருள் மகமது அவர்களின் பணப்பை ஒன்று
6) ஹரிபண்டித பண்டக்கிய அவர்களின் பணப்பை ஒன்று
7) மஹதாஜி சிந்தியா அவர்களின் பணப்பை ஒன்று

ஆகிய நான்கு பணப்பைகள் வந்து சேர்ந்தன. மிக்க மகிழ்ச்சி. தாங்கள் புறப்பட்டு வருவதற்காக அனுமதி வேண்டும் என எழுதியதைப் பார்த்தேன். அளவற்ற மகிழ்ச்சியே. இந்த நாடு முழுவதும் தங்களுடையதே.

அனுமதியை அனுப்பி உள்ளதால் தாங்கள் புறப்பட்டு வரஆவன செய்யச்சொல்லவும்.

தாரிக்கு 11-மாஹே திரிசால்
சாஹே-சன் 1221 மகமத்
பிரமோதீச சம்வத்சர
கார்த்திக சுக்லா-12

° ஸ்ரீமந்தர் என்பது பீஷ்வாவை குறிக்கும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடிதம் 65

மீண்டும் தம் அடுத்த கடிதத்தில் திப்பு சுல்தான் சுவாமிகள் வருகையைப் பற்றியும் அவர் எல்லா மக்களின் நலனுக்காகச் செய்யும் தன்னலமற்ற தவத்தைப் பற்றியும் சிறப்பித்து கூறுகிறார். அத்துடனன்றி, தம் நம்பிக்கை, பலம் ஆகியவைகளின் அஸ்திவாரமாக தெய்வத்தின் அருள், தவத்திரு ஜகத்குருவின் ஆசிகள், தன் படைபலம் ஆகியன அமைந்திருப்பதைக் கூறுகிறார். அத்துடனன்றி ஸ்படிக லிங்கமொன்றும் சுவாமிகளின் பூஜைக்காக திப்பு பயபக்தியுடன் அனுப்பியுள்ளதையும் தெரிவிக்கிறார். தாமே சிர்ங்கேரி வரப்போவதாக அறிவிக்கிறார். ஆனால் அவர் ஆசை நிறைவேறவில்லை.

* * *

தங்கள் கடிதத்திலிருந்து எல்லா விவரங்களும் தெரியலாயின.

தங்களிடத்திற்கே தாங்கள் வந்து சேர்வதாக எழுதியது சரி, நல்லதாயிற்று. முக்காலம் ஏக நிஷ்டையுடன் ஈசுவர தியானம் செய்யும்போது நம்மேல் எப்போதும் கவனம் வைத்து தியானம் செய்துகொண்டிருப்பதாக மல்லா பண்டிதர், நரசிம்ம சாஸ்திரி ஆகியோர் மூலமாக அறிந்தோம். தம் மனத்தில் மூன்று விஷயங்களில் ஆணவமுள்ளது; அவையாவை என்றால்

முதலாவது ஈசுவரனின் பரிபூரண அருளுக்குப் பாத்திரமாகி யிருப்பது.

இரண்டாவது உங்களைப் போன்ற ஆசாரியாளுடைய ஆசீர்வாதம் பெற்றிருப்பது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மூன்றாவது, நமது ஆயுதப்படை ஆகியவைகள் பலமாக இருப்பது.

இம்மூன்றில் ஈசனின் அருளுக்குப் பாத்திரமாக வேண்டும் என்றால் தங்களைப் போன்ற பெரியவர்களின் ஆசீர்வாதத்தினாலேயே முடியும்.

தாங்கள் அனுப்பிய யானை, குதிரை ஆகியவைகளையும் பார்த்தேன். தங்கள் மடத்தில் பல மக்களுக்கு உணவளித்து வருகிறீர்கள். அங்ஙனமிருக்க, இந்த வாயில்லா ஜீவன்களை சுமையாக எண்ணலாமா? இவை ஸ்ரீ மடத்தில் இருக்க வேண்டியவையே. எனவே திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. அவைகளை அங்கேயே நிறுத்திக் கொள்ளவும்.

இப்போது தாங்கள் போர்த்திக்கொள்ள ஒரு ஜதை சால்வை அனுப்பப்பட்டுள்ளது. பெற்றுக் கொள்ளும்படி செய்யவும். சில நாட்களில் நானும் குதிரை மீது அந்த பிராந்தியத்திற்கு (சிர்ங்கேரிக்கு) சவாரி செய்துக் கொண்டு வருவேன். தங்களையும் அப்போது தரிசிப்பேன்.

மற்ற விவரங்கள் எல்லாம் மல்லா பண்டிதரும், நரசிம்ம சாஸ்திரியும் கூறுவார்கள்.

தாரிக்கு 24 மாஹே தர்க்க சால்
ஷாத சன் 1223 மகமத்.
இராக்ஷஸ சம்வத்சர ஜேஷ்ட பகுள 8.

பின் குறிப்பு

இப்போது தாங்கள் சமீபத்தில் வைத்துக் கொண்டு பூஜை செய்வதற்காக ஸ்படிக லிங்கம் ஒன்று அனுப்பப்பட்டு உள்ளது. இது சிறப்பான பூஜைக்குரியதே. இதை வைத்து பூஜை செய்யும்போது, எப்போதும் தங்களுக்கு (நம் நினைவு) இருக்க வேண்டுமென சிவலிங்கம் அனுப்பப்பட்டுள்ளது. தங்கள் சொந்த தேவதார்ச்சனையில் சிவலிங்கத்தை வைத்து பூஜை செய்யவும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்படிக லிங்கம்

ஒரு வர்ணனை

மைசூர் சுல்தான்கள் ஹைதர் அலியும், திப்பு சுல்தானும் சிர்ங்கேரிக்கு ஏராளமான நிலம், பணம், இதர பொருட்கள் என வாரி நன்கொடையாக வழங்கினர்.

ஆனால், இந்த நன்கொடை விஷயத்தில் தந்தையை மிஞ்சிவிட்டார் திப்பு சுல்தான். அவர் சிரங்கேரி ஜகத் குருவுக்குக் கொடுத்த ஸ்படிக லிங்கம் இன்றும் ஸ்ரீ ஸ்ரீ சன்னிதானம அவர்களின் பூஜையில் கம்பீரமாக இருபபதைக் காணலாம். ஸ்படிகம் என்றால் வெண்மை யானது, தூய்மையானது. இந்த லிங்கத்தின சிறப்பு என்ன என்றால், ஒரே ஒரு ஸ்படிகத்தினால் அது செய்யப்பட்டு இருப்பதுதான.

அந்த லிங்கத்தைச் சற்று கூர்ந்து பார்ப்போமா? அதன் உயரம் 6 அஙகுலம். இதன் உயரமும், லிங்கத்தின் ஆரமும் ஒரே அளவன. லிங்கததின அடிப்பகுதியின் ஆரம் 4 அங்குலம். இந்த லிங்கத்தின மேற்பகுதி 1.2 அங்குலம்.

உற்று நோக்குவோரை தன்பால் ஈர்க்கும் ஸ்படிக லிங்கம திப்புவின பரந்த, பக்தி மிகுந்த சமய சார்பற்ற தூய உள்ளத்தை ஒளிவிட்டு காட்டுகிறது. ஏறத்தாழ நூற்றுத் தொண்ணூறு ஆணடுகள் கடந்து விட்டாலும், இனறும் ஸ்படிக லிங்கம் ஒளி வீசுகிறது. ஸ்ரீ ஸ்ரீ சன்னிதானம் அவர்கள் இந்த லிங்கத்திறகு தினமும் வழிபாடு செயகிறார். சந்திர மௌளீஸவர லிங்கத்திற்கு தினமும் ஸ்ரீ ஸ்ரீ மகா சன்னிதானம் அவர்கள் பூஜை செய்கிறார்.

இவ்விரண்டு லிங்கங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், ஸ்ரீ சந்திர மௌளீஸ்வர லிங்கத்தின் தலையிலிருந்து ஒளி வீசுவதைக் காணலாம். அதுவும் அன்றி, ஸ்படிக

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

லிங்கம், ஸ்ரீ சந்திரமௌளீஸ்வர லிங்கத்தைக் காட்டிலும் சற்று பெரியதாக இருப்பதால் வேற்றுமை புலனாகும்.

"எங்களை இந்த மதவெறி பிடித்த கொடுங்கோல் மன்னன் திப்புவிடமிருந்து காப்பாற்றுங்கள் என இந்து மக்கள் ஆங்கிலேயரை வேண்டியதாகச் சொல்லும் ஆங்கில வரலாற்றாசிரியர் கூற்று எவ்வளவு பொய்யானது?"

திப்பு சுல்தான் எழுதிய 21-வது கடிதம் 1799-ல் எழுதப்பட்டது. அப்போது நான்காவது மைசூர் போர் தீவிரமாக நடந்துக்கொண்டிருந்த நேரம். திப்புவை "ஆங்கிலேயரின் பணத்திற்கும், பதவிக்கும்" மயங்கிய மக்கள் தங்கள் பிரதிநிதியாக வாழ்ந்த திப்புவுக்கு மனதாற துரோகம் செய்து, ஆங்கிலேயரை ஸ்ரீரங்கபட்டினத்திற்குள் வரவேற்று, நம் தாய் திருநாட்டின் சுதந்திர வேட்கைக் கொண்ட வேங்கை, 'மைசூர் புலி' - திப்புவையும் கொன்றனர்.

* * *

வில்லிபுத்தூரார் இத்தகையோரை 'உடனிருந்தே கொல்லும் வியாதி போல!" என்றார். தம்மை ஆதரித்து காத்த சிறந்த மன்னரை அன்னியனுக்கு காட்டிக் கொடுத்த ஆண்டு 1799. ஆங்கிலேயர் நைஜாம் - தம் உறவினர் என பல தாக்குதல்களிலும் - தன்னருமை துணையை யிழந்த திப்பு, உயிருக்கு அஞ்சி ஓடவில்லை. கடைசி மூச்சு வரை பொருதார்; போரிட்டார்! விழுப்புண் எய்திய அந்த இந்தியர் என்ன வேண்டினார் தெரியுமா?

"ஆண்டவனே! என்னை என் நாட்டவன் கொல்லும்படி செய்யாதே! அந்த சிறுமை என் நாட்டிற்கு வேண்டாம்!" என வேண்டினார் திப்பு. வீரத்தாய் அவரை தன் மடியில் கிடத்திக் கொண்டாள். பூத உடலில் இன்று திப்பு இல்லை. ஆனால் அன்று அவர் விதைத்த சுதந்திர வித்து, ஆலமரமாக தழைத்து, எதிர்ப்பை எல்லாம் தகர்த்து, இன்று பாரத தாய்க்கு நிழல் கொடுக்கிறது. இனி அவருடைய கடிதத்தை படிப்போமா?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



திப்பு சுல்தான் ஜகத்குருவுக்கு எழுதிய ஒரு கடிதம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இந்தக் கடிதத்தில் முக்கியமாக அவர் என்ன கூறுகிறார் தெரியுமா? சஹஸ்ரசண்டி ஜபம், ஹோமம் ஆகியவற்றினால் ஏற்பட்ட திடீர் திருப்பங்களைப் பற்றி வியந்து எழுதுகிறார்.

கடிதம் 66

காளயுக்தி - 1798 - 99

ஸ்ரீமத் பரமஹம்சாதி யதோக்த பிருதங்கிதரான சிர்ங்கேரி ஸ்ரீ சச்சிதானந்த பாரதி சுவாமிகள் அவர்களுக்கு திப்பு சுல்தான் பாதுஷா அவர்களின் சலாம்.

சிர்ங்கேரியில் முன்பு சஹஸ்ர சண்டி, ஹோமம் ஆகிய செய்து வைத்ததால் காப்பீரிகளும், பரங்கியரும் * மற்றவர்களும் நாசமானார்களல்லவா?

இப்போதும் அதேபோல சண்டி ஹோமம் செய்ய வேண்டும். அதற்குத் தேவையான சாமான்களை கொடுக்கும்படி நகரா அசப்பனுக்கு ஆணை அனுப்பப் பட்டுள்ளது. நகரா அசப்பனிடமிருந்து, சாமான் எடுத்துக் கொண்டு பகை நாசமாவதற்காகவும், அரசுக்கு வெற்றி கிடைப்பதற்காகவும், சண்டி ஹோமம் முதலானவற்றைச் செய்ய வேண்டுகிறேன். தாங்கள் முக்காலமும் ஈசுவர பூஜை செய்யும்போது, விரதமிருந்து எந்த தேவதையை பிரார்த்திக்க வேண்டுமோ, அதே பிரகாரம் ஈசுவர பிரார்த்தனை செய்யவும்.

தாரிக்கு 14 மாஹே ரப்பானி சால்
ஷாகாத் சன் 1226 - மகமத்

---

* காப்பீர் - நம்பிக்கையில்லாதவருக்கும் இதர ஜாதியினருக்கும் முஸ்லீம்கள் கொடுத்த பெயர்.

பரங்கியர் - ஆங்கிலேயர்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இவையன்றி, வேறு ஒரு சமயம் திப்பு ஜகத்குருவை வருண ஜபம் செய்யும்படியும் 24 நாட்களுக்கு (அதாவது $\frac{1}{2}$ மண்டலம்) ருத்ராபிஷேகம் செய்யும்படியும் வேண்டினார், நாட்டில் மழை குறைந்ததால், மழையை வேண்டி, மழைக் கடவுள் வருணனுககு ஜபம் செய்ய வேண்டினார். நாட்டிலே திடீரென வந்த எதிர்பாராத தீய விளைவுகளைப் போக்கவேண்டி ருத்ராபிஷேகம் செய்யுமாறு கோரப்பட்டது.*

மற்றுமோரு கடிதத்தில் எவ்வாறு வருண ஜபம் நல்ல பலனை கொடுத்தது என்றும், விளைச்சல் எப்படி அதிகரித்தது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார்.*

* சிர்ங்கேரி ரிகார்ட் – 66.

சிர்ங்கேரி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ சச்சிதானந்த பாரதி (III) சுவாமிகளுக்கு திப்பு எழுதிய கடிதம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

எட்டாம் அத்தியாயம்

சாகசம், சூழ்ச்சி, சதி

வெள்ளையருக்கு திப்புவிடம் பெரும் பயம். காரணம் அவர் மக்களால் போற்றப்பட்ட மன்னர் என்பதால் மட்டும் அல்ல; நேர்மையானவர்,. நல்லவர், மாபெரும் வீரர் என்ற சிறப்பியல்புகள் கொண்டவராக இருந்தமையே. தங்கள் ஆதிக்க வெறிக்கு தனித்தே போராடக் கூடிய சுதந்திர இந்தியன் என்பதையும் அவர்கள் உணர்ந்தார்கள். திடீர் திடீரென எல்லா பக்கங்களிலிருந்தும் வந்து தாக்குதல் நடத்தி எதிரிகளை திக்கு முக்காடச் செய்த அந்த மாவீரனை நேர்மையான முறையில் வெல்ல முடியாதென வெள்ளையர் அறிந்தனர். குள்ள நரிக்கு தந்திரமா கற்றுக் கொடுக்க வேண்டும்?

இவர்கள் முதன் முதலில் தென்னிந்தியாவிலிருந்த நைஜாமை பணம், பதவி, நாடு ஆகியவைகளைக் காட்டி மைசூருக்கு எதிரியாக்கினர். அடுத்து, இவர்கள் சூழ்ச்சி வலையில் விழுந்தவர்கள் மராத்தியர். மூன்றாவதாக திப்புவின் படைத்தலைவர்களையும், திப்புவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களையும் தம் கைக்கூலிகளாக்கினர். அன்னியரின் பசப்பு மொழிகளை நம்பிய இவர்கள், தாய்நாட்டையே விலைக்கு விற்ற பாவிகளாயினர்.

இந்த சூழ்ச்சியுடன் வெள்ளையர் திருப்தியுறவில்லை. தமக்குச் சாதகமாக புரளிகளைக் கிளப்பினர். புரளிகளை மிக அழகாக, எல்லோரும் நம்பும்படியும் தந்திரமாகப் பரப்பினர். புரளிகளைப் பரப்ப அவர்கள் கையாண்ட உத்திகள் அநேகம்; அநேகம். எந்தவொரு சம்பவத்தையும் தமக்குச் சாதகமாக ஆக்கிக்கொண்டு புரளிகளை பரப்ப வழி வகுத்துக் கொண்டனர்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஷேக் அயாஸ்

ஷேக் அயாஸ் என்றொருவன், எழுத்தறிவு இல்லாதவன், என்றாலும் பெரிய சந்தர்ப்பவாதி. ஹைதரால் பதவி உயர்வு பெற்று, பெட்னூர் கவர்னராக இருந்தான். முதலில் இந்துவாகயிருந்த அவன், தானே வலிய முஸ்லிமாக மாறினான். சர்க்காரின் பொறுப்பான பதவிகளிலிருந்த இந்துக்களை, திடீரென எவ்வித காரணமும் கூறாமல் பதவியிலிருந்து நீக்கினான். இதையறிந்தார் ஹைதர். ஆனால் ஒன்றும் கூறவில்லை. திப்புவோ "ஒரு முறை தன் எஜமானனை மாற்றினான்; இப்போது மதம் மாறினான்; தன் பெயரையும் மாற்றிக் கொண்டான்! அடுத்து என்ன செய்வானோ?'' என்ற தம் கருத்தை தந்தையிடம் தெரிவித்தார்.

ஹைதர் இறக்கும் தறுவாயில் இருந்தார். அந்த அரிய சந்தர்ப்பத்தை வெள்ளையனின் கைக்கூலி அயாஸ் நழுவ விடவில்லை. ஹைதர் இறக்கும் தறுவாயிலிருந்த செய்தியை தந்திரமாகக் கைப்பற்றினான். செய்தியிலிருந்து அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. செய்தி கீதையின் சுலோகமாக அமைந்ததே அதற்குக் காரணம். ஹைதர் அலி இறந்தால், அவர் அவையிலிருந்த தன் நண்பர்களை கலகம் செய்ய வேண்டுமென ஆயத்தப்படுத்தி, தகுந்த தருணத்திற்குக் காத்திருந்தான்.

இச்சமயம் வெகு தூரத்தில் வெள்ளையர்களுடன் கடுமையான போரில் ஈடுபட்டிருந்தார் திப்பு. எனவே, மைசூர் சிம்மாசனத்தைக் கைப்பற்ற திட்டம் தீட்டினான். இதற்கு அவன் ஒரு உத்தியையும் கையாண்டான்.

ஹைதரின் நம்பிக்கைக்குப்பாத்திரமான பிரதான மந்திரி பூர்ணய்யாவும் மற்ற படை தளபதிகளும் சேர்ந்து ஹைதரை கொலை செய்துவிட்டதாக வதந்தியை கிளப்பினான். தான் அந்த வதந்தியின் பேரில் மைசூரின்மீது படையெடுப்பது தன்னும் ஹைதரின் மதிப்பையும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மரியாதையையும் பெற்றிருந்த இவர்களை தூக்கிலிட்டு அப்துல் கரீமை அரியணையில் இருத்தி. தான் அவனை கைப்பாவையாக்கி, அரசைக் கைப்பற்ற, வெள்ளையருடன் திட்டம் தீட்டினான். ஒரு வேளை திப்பு, வந்தால்? தன் தந்தை ஹைதரை கொலை செய்ய தூண்டியதாக கதை கட்டி, திப்புவையும் தூக்கிலிட்டுவிட இன்னுமோர் திட்டம் தீட்டினான்.

அத்துடனா? இந்த மதவெறியன் திப்பு இந்துக்களை வலுக்கட்டாயமாக இஸ்லாமியர்களாக மாற்றினார் என்றும், கிறிஸ்தவர்களை அடிமைகளாக ஈவிரக்கமின்றி நடத்தினார் என்றும் புரளிகளை தயார் செய்தான். இந்த வதந்திகளை மிகவும் கவனமாக பரப்பினான்.

ஆனால் திறமைமிக்க பூர்ணய்யாவின் முன் அவன் வதந்திகள் செயலற்றுப் போயின.

'மதவெறியன். கொடுங்கோல் மன்னன்' என திப்புவை வர்ணிக்க இடப்பட்ட முதல் வித்து இதுவே.

இதைப் படிக்கும்போது, நம்மையறியாது இந்த வெறித்தனமான செயல்களில் ஈடுபட்டவர்களே இந்த ஆதாரமற்ற புரளியைக் கிளப்பத் தூண்டினர் என்றும் தெரிகிறதல்லவா?

பெய்லி

பெய்லி என்ற ஆங்கில படைத் தலைவர். 10-ந்தேதி செப்டம்பர் மாதம், 1780 ஆண்டு போலிலூரில் முறியடிக்கப் பட்டார். திப்புவிடம் சரண் அடைந்தார். அந்த தோல்வி 'ஆங்கிலேயருக்கும் மிகப் பெருத்த அடி' என் இடியும் கூட.

அடிபட்ட பெய்லிக்கு வைத்திய சிகிச்சை கொடுத்தார்கள். இதைக் கொடுத்தவர் திப்புவின் மருத்துவரே. அடிபட்ட கைதிகளை கூடாரங்களுக்கு எடுத்துச் சென்று, ஊண், உடை ஆகியன கொடுக்கப்பட்டன. போர்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நடக்கும்போதே வீழ்ந்த வெள்ளையருக்கு தீரும் பிஸ்கோத்துகளும் கொடுக்கப்பட்ட அரிய முதல் சீவகாருண்ய சம்பவம் இதுவே. ரண சிகிச்சையும் செய்ய ஏற்பாடுகளைச் செய்தார் திப்பு. இதுவே நடந்தது.

அடிபட்ட ஆங்கிலேயர் இந்த மனிதத்தன்மையைப் போற்றினரா என்றால், அதுதான் இல்லை. மாறாக தூற்றினர். எப்படி?

ஹைதரும் திப்புவும் மனிதாபிமானமே இல்லாத இரத்த வெறியர் என்றனர். அத்துடனா, கைதிகளை அவர்கள் துன்புறுத்தியதாக கதைகளை ஜோடித்தனர். அச்சிட்டனர். அச்சிட்ட பிரதிகளை வாரிவாரி இறைத்தனர். ஏன்? தாம் தோற்றதை மக்கள் பெரிதாக பேசக்கூடாது, அவர்கள் கவனத்தை திசை திருப்பவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன். பெருந்தன்மையுடன் திப்பு விடுதலை செய்த கைதிகளோ, இவர்களுடைய கூற்றில் கைகொட்டினர். இவ்வளவு தீவிரமாக பொய்யை மெய்யாகத் திரித்து கூறியவர்கள் உண்மையில் என்ன செய்தார்கள்? இந்தியரை படுகொலைச் செய்தனர், சித்திரவதைச் செய்தனர், இன்னும் சொல்லொணாத கொடுமைகளை நம் நாட்டினர் மீது இழைத்ததை வரலாற்றின் ஏடுகளிலிருந்து மறைத்தனர், அழித்தனர்.

* * *

1782-ம் ஆண்டு டிசம்பர் மாதம். கிறிஸ்துமஸ் விழா மிகவும் விமரிசையாக கொண்டாடினர் வெள்ளையர். பாரத நாட்டில் எங்கெல்லாம் அவர்களது ஆதிக்கமிருந்ததோ அங்கெல்லாம் குதூகலம் நிரம்பி வழிந்தது. ஏன்? இந்துக்களின் கோயில்களையும், முஸ்லீம்களின் மசூதிகளையும் அழித்த கொக்கரிப்பா? மசூதிகளின் உள் பன்றிகளையும். கழுதைகளையும், பசுக்களையும் தொழுகை இடத்தில் ஒட்டிய பெருமிதமா? இந்து கடவுள்களின் சிலைகளை சிதைத்து உடைத்து ஏற்றால் குளிப்பாட்டிய

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கும்மாளமா? பெண்கள் அணைத்திருந்த சிறு குழந்தைகளைத் தூக்கி பந்தாடிய அட்டகாசமா? பெண்களைத் துன்புறுத்திய பெரு உவகையா?

இவைகளை எழுதுவார் இல்லை; தட்டி கேட்பாரும் இல்லை என்ற தைரியமா? இந்து, சாஸ்திர நூல்களையும் முஸ்லீம்களின் புனித நூல்களையும் தீயிட்டு எரித்ததால் இனி இம்மதங்கள் ஒருவாறாக எரிந்து சாம்பலாகிப்போகும் என்ற அசட்டு நம்பிக்கையா? எது எவ்வாறாயினும் சரி, இந்த அட்டூழியங்கள் நம் நாட்டு வரலாற்று புத்தகங்களில் மட்டுமே இடம் பெறவில்லை என்றுணர வெள்ளையர் தவறியதேன்? இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அமைதி, நல்லெண்ணம் ஆகியவற்றிற்கு உயிர் துறந்த யேசுவின் பிறந்த நாளிலா, இவர்கள் செய்ய வேண்டும்?†

பத்திரிகைகள்

பத்திரிகை நிருபர்களோ, வெள்ளையரின் வதந்திகளைப் பரப்புவதில் பெரும் பங்கு கொண்டனர்,

கோபால் ராவ் என்பவர் ஒரு படைத்தலைவர். ஆங்கில படைக்கு தேவையான பொருட்கள் செல்லாமல், ஆங்கிலேயரை திணறடித்த ஒர் இந்தியர். மிகச் சிறியதொரு படையை வைத்துக் கொண்டு ஆங்கிலபடைத் தளபதி ஹம்பர்ஸ்டோனை மருளச்செய்தவர். செய்வதின்னது எனத் தெரியாமல் வெள்ளையர் படைத் தலைவர்கள் இருளோடு இருளாக எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடினர்.

ஓடியவர்க்கும் புகழாரம் சூட்டின பத்திரிகைகள்! எப்படி?

போர்க்களத்தில் வெற்றியைப் பற்றி இவை கவலைப்படவில்லை. ஒரு உதாரணம் இதோ தருகிறோம். ஒரு முறை வெள்ளையர்கள் ஒரு சிறு போரில் ஈடுபட்டு

† ஒரு ஆங்கிலேயரின் டைரியிலிருந்து

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இருந்தனர். அதில் கைப்பற்றியது என்ன தெரியுமா? ஒரு இறந்து போன ஒட்டகை. அன்னியபடை புறமுதுகிட்டு ஓடின. இந்நிகழ்ச்சி எழுத்தில் எப்படி உருப்பெற்றது தெரியுமா?

'இந்நாட்டு (Natives) மக்கள் தங்கள் இறந்தவர்களையும் விட்டு விட்டு ஓடினர்' என்று கொட்டை எழுத்தில் வெளியிட்டன. ஆங்கில படையின் திறமையை பத்தி பத்தியாக வர்ணித்தன. படைத் தளபதியையும் படைத் தலைவரையும் அவர்கள் வீர சாகசங்களுக்காகப் பாராட்டின.

உண்மையில் அந்த ஒட்டகை கூட இவர்களுடைய குண்டினால் வீழவில்லை என்பது அவர்களுக்கு மட்டுமே தெரிந்ததாக அவர்கள் நினைத்தனர்.

* * *

ஜெனரல் மலார்டிக்

திப்பு, உஸ்மான்கான் தலைமையில் ஒரு குழுவை பிரெஞ்சு நாட்டிற்கு அனுப்பினார். எதற்காக? அழகிய செடிகளையும், மலர் செடிகளின் விதைகளையும் பெறுவதற்காகவும் வெளிநாட்டு வியாபாரத்தை பெருக்குவதற்காகவும் அனுப்பப்பட்ட நல்லெண்ண குழுவே இது. அதே போல், பிரான்ஸ் தீவில் இருந்தார் ஜெனரல் மலார்டிக் என்பவர். இவர் பிரெஞ்சு நாட்டிற்கு உட்பட்ட ஒருவர். அதிக படைபலமோ வேறு செல்வாக்கோ இல்லாதவர். 1798ல் திப்பு தம் நாட்டிற்கு தொழில் திறம் படைத்தவர்களை அனுப்புவதை பற்றி வணிக ஒப்பந்தம் செய்ய ஒரு குழுவை அனுப்பினார். ஆங்கிலேயர் அதற்கு முன்னரே தம் பிரதிநிதிகளை சூழ்ச்சி செய்ய அனுப்பினர். அதன் பயன்?

ஜெனரல் மலார்டிக் 30ம் தேதி ஜனவரி மாதம் 1798 ஆம் ஆண்டு ஒரு அறிக்கை வெளியிட்டார்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

‘இரண்டு தூதுவர்கள் மைசூர் நாட்டிலிருந்து வந்தனர். நாட்டின் பாதுகாப்புக்காக, படைகள் வேண்டி ஓர் ஒப்பந்தமும் செய்துக் கொண்டனர். ஆங்கிலேயரை இந்தியாவில் இருத்து விரட்டியடிக்கும்வரை பிரெஞ்சு படையொன்றை மைசூரில் வைத்துக் கொண்டு, அதன் செலவுகளையும் திப்பு சுல்தான் ஏற்றுக் கொள்வதாக ஒப்பந்தம் ஏற்பட்டது’ என்பதே அது.

இந்த அறிக்கை கல்கத்தா பத்திரிகையிலும் வெளியாகியது. ஏன்? ஆங்கிலேயர் தம் அட்டூழியச் செயல்களை மறைப்பதற்காக! அத்துடனா? திப்பு பார்க்காத நெப்போலியனின் கடிதமொன்றையும் நான்காவது மைசூர் போரின் காரணமாகக் காட்டியது.

சாகசம், சூழ்ச்சி சதிக்கு பத்திரிகைகளும் பலியாகிவிட்டால் என்ன சொல்வது? வேலியே பயிரை மேய்ந்தது போல் தான்!

* * *

வீரனாகவே வாழ்ந்து, நாட்டிற்காக தன்னை தியாகம் செய்த திப்பு சுல்தான் பூத உடல் இன்று இல்லை. ஆனால் பாரதத்தின் சுதந்திரப்புதல்வன் அன்றும் வாழ்ந்தார். இன்றும் வாழ்கிறார். என்றென்றும் வாழ்வார். ஏன்? இது வரை இவரை மறைத்திருந்த பொய்யெனும் திரை கிழியும்; உண்மை வெளியாகும்; மதவெறியன் என்ற பொய்யுரை அறவே அழிந்து சன்மார்க்க நெறிக்காக போரிட்ட பெருந்தகை என்று உலகமே போற்றும். அந்நாள் விரைவில் வரும் என்று தெரிகிறதல்லவா?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஒன்பதாம் அத்தியாயம்

திப்பு ஒரு தீர்க்கதரிசி

நான்காம் மைசூர் போர் முடிவுறும் நேரம். வெள்ளையர் ஸ்ரீரங்கப்பட்டினத்திற்கு மிகவும் அருகில் நெருங்கி விட்ட சமயம் திப்புவும் அவரது பிரதம மந்திரி, பூர்ணய்யாவும் இந்த நெருக்கடியை சமாளிக்கும் விதத்தை அலசிக் கொண்டிருந்தனர். திப்புவின் நம்பிக்கைக்கு பாத்திரமான சேனைத் தலைவர்கள் எங்கே? எங்கே எங்கே? இக்கேள்விக்கான பதிலை திப்பு வெகு சீக்கிரமாகவே ஊகித்துக் கொண்டார். ஒரு முழுமையான வெற்றி கூட பெறாத ஆங்கிலேயர் தம் கோட்டைகளை எவ்வளவு சுலபமாகக் கைப்பற்றி விட்டனர்! இது மர்மமா? இல்லை, சதி, சதி, திட்டமிட்ட சதி! இதை உணர்ந்தார் திப்பு. கசப்பான உண்மை—அவர் தம் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தியது. அந்த சமயத்தில் அவர் சொன்ன சொற்களின் ஆழமென்ன; உண்மை என்ன? மற்றும் தூரதிருஷ்டிதான் என்ன?

'வெளியே பகை இருப்பதாகச் சொல்வது எவ்வளவு தவறு! பகை நம்மிடையே, நம் நாட்டவர் இடையேதான் உள்ளது. அதுவே நம் உரிமையைக் கொல்லும் விஷ வித்து, இன்று மைசூரில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியான நிலைமை நம் கோழைத்தனத்தை எடுத்துக் காட்டுகிறதா? இல்லை, இல்லவே இல்லை. நம் வரலாறு இதுவரை எடுத்துச் சொல்லிய ஒரு பேருண்மையையே பிரதிபலிக்கிறது. வீரத்திற்கு நம் நாட்டில் பஞ்சமில்லை. விரைவாகத் தீர்மானங்கள் எடுக்கக்கூடிய திறனுக்கோ. புத்தி கூர்மைக்கோ குறைவேயில்லை. பின்? ஒற்றுமை, ஒற்றுமைக்குத்தான் பெரும் பஞ்சம். இது மறைக்கமுடியாத உண்மை; ஏன், மறுக்க முடியாததும் கூட. ஒற்றுமை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

குறைந்தது; வேற்றுமைகள் வளர்ந்தன; நம் நாட்டின் செல்வாக்கு குறைந்தது; குலைந்தது; அழிந்தது. இந்த இருண்ட காலத்தில் பற்பல படையெடுப்புகள் ஏற்பட்டு, நாம் அடிமைகளானோம். அந்த அடிமைத் தளையைப் போக்க, ஓரிருவர் முனைந்தபோது, மற்றவர் எதிரிகளோடு சேர்ந்து, நாட்டையே பணயம் வைத்தனர். இன்று மைசூரில் நடப்பதும் அதுவே.

ஆனால், பாரதம் நிச்சயமாக ஒரு நாள் சுதந்திரம் அடையும். இதில் ஐயமே இல்லை. நாம் அதைக் காண உயிருடன் இருக்கமாட்டோம். இந்த நாட்டின் சுதந்திரத்திற்காக தங்கள் இரத்தத்தைச் சிந்திய எண்ணிறந்தவர்களை இந்நாடு அப்போது நினைத்து பார்க்குமோ? அன்னிய ஆட்சியை எதிர்த்துப் போராடிய இந்த தியாகிகளை நினைவுறுமா? அதுதான் என் கேள்வி.

சுதந்திரம் வந்தபின், இவர்களை நினைக்காவிட்டால், அது முழுச் சுதந்திரமாகிவிடுமா? அஸ்திவாரம் இல்லாத சுதந்திரம் முழுமைப் பெறுமா? மத வேற்றுமை, வகுப்பு வாதம், மொழிச் சண்டை, மாநிலங்களிடையே ஒற்றுமை இன்மை, சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் சண்டை என்ற தீயச் சக்திகள் தலைவிரித்து ஆடினால், அச்சுதந்திரத்தின் தன்மை எத்தகையதாக இருக்கும்? இந்த மோசமான நிலை பின்னரும் தொடர்ந்திருந்தால் நம் நாட்டின் நிலை என்னவாகும் என்று நினைக்கும்போது எனக்கு பெருங்கவலை ஏற்படுகிறது. அறியாமை, சுயநலம், பேராசை இவைகள் நிலைத்தால், பாரத அன்னையின் மதிப்பு எவ்வளவு குறையும்! உடன் பிறந் தோரிடையே பகை; மொழிகளிடையே பிரிவேற்றுமைகள், பொறாமை, சுயநலம், அறியாமை ஆகியன வேரூன்றி பெரும் ஆலமரமாக வளர்ந்து விட்டால், நாட்டின் செல்வாக்கை குறைக்காதோ? ஒற்றுமையின்றி, மக்கள் சிதறுண்டு போகமாட்டார்களோ?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உரிமைக் குரல் எழுப்பினால் இன்று குற்றம். ஆனால், அப்போது லஞ்சம், வெறுப்பு ஆகியன குற்றம் ஆகாது. நியாயமானதாக ஏற்கப்படும் அன்றோ?

இஃது ஒரு நல்ல சூழ்நிலையா? சிந்தித்துப் பாருங்கள். இன்று சூழ்ச்சிகள் மூலம் நம்மை பகைவர் கொன்றுவிட்டனர்; ஆனால் அவர்கள் மட்டுமா சூழ்ச்சிக்காரர்கள்? நம்மவரில் எத்தனை பேர் நம் பாரத நாட்டின் நலனையே பெரிதாக நினைத்து, தம்மை அர்ப்பணிக்கப் போகிறார்கள்? நான் நாட்டிற்காக என் உடல், பொருள், ஆவியை அர்ப்பணிக்க தீர்மானித்து விட்டேன். கடைசி மூச்சு உள்ளவரை, நாட்டின் உரிமைக்காக போராடுவேன்!''

அன்று திப்பு உதிர்த்த வார்த்தைகளை இன்று ஊன்றி படிக்கும்போது, நம்மையறியாது, நம் நிலையையே சீர்தூக்கி பார்க்கச் சொல்கிறது அல்லவா?

அத்துடனா? திப்பு ஏன் தப்பிச் செல்லவில்லை என்றும் புரிகிறதல்லவா?

இவர் எவ்வளவு பெரிய தீர்க்கதரிசி!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

விளக்கம், விவரம், திருத்தம்

படங்கள் - விளக்கம்

பக்கம்

3	—	ஸ்ரீரங்கப்பட்டினத்தின் வீழ்ச்சி
8	—	திப்பு சுல்தான்
14	—	ஆதி சங்கரர்
15	—	சிர்ங்கேரியின் ஒரு தோற்றம்
16	—	ஸ்ரீ சாரதாம்பாள்
28	—	ஆதி சங்கரரும் அவர் ஸ்தாபித்த பீடங்களும்
29	—	பாரத மாதா
37	—	விக்டோரியா அர்பத்நாட் மியூசத்தில் வைக்கப்பட்ட — திப்புவின் புலிச் சின்னம் புலி – திப்பு; படைவீரர் — ஆங்கிலேயர்
53	—	ஸ்ரீ சிர்ங்கேரி ஸ்ரீ சாரதையின் கோயில்

விவரங்கள் - திருத்தங்கள்

பக்கம் எண்		வரி		
viii	—	12	—	அவர்களுக்கும்
3	—	8	—	வெல்லிங்டன் பிரபு ரிச்சர்ட் வெல்லெஸ்லி என்றும் அழைக்கப்பட்டார்
,,	—	13	—	அர்ப்பணித்தார்
5	—	30	—	ஹைதரை
14	—	10	—	செய்ய வேண்டி
17	—	23	—	தக்ஷிணாம்னாய பீடம்
19	—	29	—	பாலாஜி பாஜி ராவ்
24	—	10	—	பீஷ்வாவின் உறவினர்
25	—	19	-	நிராஜி — விலையுயர்ந்த சிறப்பான
,,		நிஷானிக்காக தர்ப்தா — நல்லெண்ண சின்னமாக திரைகள்		

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

27 — பாருபத்யாகரா – கோவில் — சத்திர
அதிகாரிகள்

28 — அக்ர தாம்பூலம் — பெரிய கூட்டத்தில்
செய்யப்படும் முதல் மரியாதை — (வெற்றிலை
பாக்கு ஆகியன)

31 — 30 — தம்மை

46 — 10 — விற்பன்னர்களுடன்

47 — 20 — இடங்களிலும் உள்ள

52 — 21 — இக்கருத்தினையே

நகரா அசப் – ஒரு அரசு ஊழியர்

55 — 5 — விவரங்கள்

அமல்தாரர் – வரி வசூல் செய்யும்
மேலதிகாரிகள்

61 — 10 — கைது செய்து

61, 62, 63 ஜபர்ஜத்

64 — 5 — ஆணைகள் இரண்டு எழுதி

67 — 2 — சாவ்ரின்

68 — 14 — இராஹிமானி

70 — 23 — அறிந்தவைகள் (விவரங்கள்)

71 — 4 — நரசிம்ம சாஸ்திரியும்

74 — 24 — சஹரா

74 — 25 — பகுளா 12

75 — 5 — பின்னர் சில நாட்கள்

79 — 22 — தினி சால்

80 — 20 — நம்

83 — 2 — திப்புவிடமிருந்து

,, — 4 — ஆங்கில

91 — இடம் பெற்றன; மற்ற வரலாற்று நூல்களிலே
இடம் (பெறவில்லை)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

திப்புவின் சில ஆணைகள்

கைப்பற்றிய நாட்டை கொள்ளை அடிப்பதால் ஒரு சிலர் பொருள் ஈட்டலாம். ஆனால், இத்தகைய செயல் ஈனச் செயலாகும். அது மட்டுமா, நாட்டையும் அதன் படையின் செல்வாக்கையும் மிக மிக குறைக்கும். போர், போர்க்களத்தின் எல்லைக் குள்ளேயே அமைய வேண்டும். ஒன்றுமறியா பொது மக்களை துன்புறுத்தக் கூடாது. பெண்ணினத்தை மதிப்புடனும் கௌரவமாகவும் நடத்த வேண்டும்; வெற்றிக்கொண்ட நாட்டின் மதத்தை மதித்து நடக்க வேண்டும். அந்நாட்டு குழந்தைகளையும், மற்றும் உள்ள பலவீனர்களையும் பாதுகாக்க வேண்டும்.

திப்புவின் இந்த ஆணை கி. பி. 1783, 1785, 1787 — மற்றும் அடிக்கடி பிறப்பிக்கப்பட்டது.

திப்புவின் கி. பி. 1783 பிரகடனம்.

''எல்லாம் வல்ல இறைவனை புகழ்வோம். ஒரு பிடி களி மண்ணினால், மனிதனை உருவாக்கிய கடவுள். ஒரு சிலரை மட்டும் உயர் பதவியையும், பெரிய பொறுப்புகளை வகிக்கவும் முக்கியமானவர் களாய் படைத்தார். ஒரு சிலரை செல்வம் படைத்தவர் களாகவும், நாட்டை ஆள்வதற்காகவும் படைத்தார். ஏன்? நாட்டிலுள்ள ஏழை, எளியவர், ஆதரவற்றோர், அநாதைகள் ஆகியோரை பாதுகாத்து மக்களின் நலனைப் பேணவே.''

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பார்வை நூல்கள்

1) Jagadguru Sringeri Sri Matya Prarthana Lekha Mala Sangraha.

2) Sringeri Souvenir - 1968.

3) The Throne of Transcedental Wisdom by Sri K. R. Venkataraman.

4) The Sword of Tipu Sultan by Bhagwan S. Gidwani.

5) History of Sringeri by A. K. Sastri.

6) Ports of India by Virginia Foss.

7) The History of Hyder Ali and Tipu Sultan, by Ghulam Mohammed

8) The History of the Reign of Tipu Sultan by Mira Hussein Ali Khan Kirman. Translated by Colonel W. Miles.

9) Homage to Karnataka by Marg Publications

10) Karnataka Through ages.

11) Secret correspondence of Tipu Sultan by Kabir Kausar.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ சாரதா டிரஸ்டின் வெளியீடுகள்

1) ஸ்ரீ சிர்ங்கேரி சாரதா பீட வரலாறு

2) அத்வைத அருள் ஜோதி

3) அருளொளி அனுபவங்கள்

4) Sri Vidya Theertha Maha Swamigal
— Some Anecdotes

எமது வெளியீடுகள்

1) ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மகா சுவாமிகள்

2) காந்தி நினைவு

3) சோஷலிஸ்ட் ஜவஹர்

4) கம்பன் கவித்திரட்டு (பால காண்டம்)

5) அனுமன் அருட்செல்வம்

6) திப்பு சுல்தான் ஒரு மத வெறியரா ?

7) Tipu Sultan, a Fanatic?

Sri Vidyabharathi Book Centre, Sringeri